# நாடார் குல மித்திரன்.

1927 ஞு ஜூலை மீ 27 உ


## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

4-ம் பிரிவு 5-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி நவஜீவன் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் அவருடைய ஜீவிய சரித்திரம் பின்வருமாறு:—

1893-ம் வருஷத்தில் நான் கிறிஸ்தவ நண்பர்களுடன் நெருங்கிப் பழகிய போது எனக்கு ஸ்வமதத்தைப்பற்றி அதிகமாக ஒன்றுமே தெரியாது. அவர்கள் ஏசுநாதரின் உபதேசத்தை நான் உணர்ந்து அங்கீகரிக்குமாறு செய்ய அதிக முயற்சி எடுத்துக்கொண்டனர். நான் மனதில் ஒரு களங்கமுமின்றித் தாழ்மையுடனும் மரியாதையுடனும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தேன். அச்சமயத்தில் நான் என்னுடைய பூரா சாமர்த்தியத்தையும் உபயோகித்து ஹிந்துமதத்தைப்பற்றிப் படித்து அத்துடன் இதர மதங்களையும் தெரிந்துகொள்ள முயன்றேன்.

1903-ம் வருஷத்தில் நிலைமை ஒருவாறு மாறிவிட்டது. பிர்ம்மஞான சங்க மெம்பர்களான நண்பர்கள் என்னையும் தங்களோடு இழுத்துக்கொள்ள முயன்றனர். ஆனால் ஒரு ஹிந்து என்ற முறையில் என்னிடமிருந்து ஏதாவது பெற உத்தேசித்தே அவ்வாறு அவர்கள் முயன்றனர். பிர்ம்மஞான நூல்களில் ஹிந்து மதத்தின் செல்வாக்கு நன்கு பதிந்திருந்தது. ஆகையால் இந்த நண்பர்கள் நான் அவர்களுக்கு அதிக உதவியாக இருப்பேனென்று எதிர்பார்த்தனர். எனக்கு அதிக சமஸ்கிருத ஞானமில்லையென்றும், ஹிந்துமத நூல்களின் மூலங்களை நான் படித்ததில்லையென்றும், மொழி பெயர்ப்புகளின் மூலம் கூட நான் அவற்றை அதிகமாக ஊன்றிப் படித்ததில்லை யென்றும் நான் அவர்களிடம் விளக்கினேன். ஆனால்முந்திய ஜென்மத்தைப்பற்றிய தோற்றங்களிலும் புனர் ஜன்மத்திலும் அவர்களுக்கு நம்பிக்கையிருந்ததால் நான் கொஞ்சமாவது அவர்களுக்கு உதவிசெய்யக் கூடுமென்று அவர்களாக நினைத்துக் கொண்டனர். ஆகவே ஒன்றும் தெரியாதவர்களிடையில் ஒரு பெரிய வித்துவானைப்போல் காணுவிட்டேன். ஸ்வாமி விவேகானந்தர் ராஜ யோகத்தைப்பற்றிச் செய்த பிரசங்கத்தைச் சிலருடனும் எம். என். த்விவேதியின் ராஜ யோகத்தை வேறு சிலருடனும் நான் படிக்கவாரம்பித்தேன். அறிவைத் தேடுபவர்களின் சங்கத்தைப்போல் நாங்கள் அமைத்துகொண்டு அங்கு ஒழுங்காகப் படித்துவந்தோம். பதஞ்சலியின் யோகசூத்ரங்களை ஒரு நண்பருடனும் பகவத்கீதையைப் பலருடனும் நான் சேர்ந்து வாசிக்கவேண்டியிருந்தது. ஏற்கனவே எனக்கு கீதையில் நம்பிக்கையும் பிரியமும் ஏற்பட்டுவிட்டது. இப்போது அதை ஆழ்ந்து படிக்கவேண்டிய அவசியத்தை நன்றாகத் தெரிந்துகொண்டேன். என்னிடம் இரண்டொருமொழி பெயர்ப்புகள் இருந்தன. அவற்றின் உதவியால் நான் சமஸ்கிருத மூலத்தை அறிந்துகொண்டு தினம் இரண்டொரு ஸ்லோகங்களை மனப்பாடம் பண்ணத் தீர்மானித்தேன். காலைக்கடன்களைச் செய்யும் காலத்தை இதற்கு உபயோகித்தேன். பல் தேய்ப்பதற்கு 15-நிமிஷமும் ஸ்நானத்திற்கு 20 நிமிஷமுமாக இவற்றிற்கு தினம் 35 நிமிஷம் பிடிக்கும். மேல் நாட்டினரைப் போல தாழ்வாரத்தில் நின்றுகொண்டு நான் பிரஷை உபயோகித்துப் பல்தேய்ப்பது வழக்கம். ஆகவே எதிரிலுள்ள சுவற்றில் கீதையிலிருந்து ஸ்லோகங்களை எழுதிய காகிதங்களை ஒட்டிவிட்டு மனப்பாடம் பண்ணுவதற்கு அடிக்கடி பார்த்துக்கொள்ளுவேன். தினப்படி புதிதாகப் பாடம்பண்ணவும் முந்திப்பாடம் பண்ணியவற்றை ஞாபகப்படுத்திக் கொள்ளவும் இச்சமயம் போதுமானதாகவிருந்தது. இம்மாதிரி நான் 13-அத்தியாயங்களை மனப்பாடம் பண்ணினேன். ஆனால் பின்னால் வேலை அதிகரிக்கவே கீதையைப்பாடம் பண்ணுவதை விட்டுவிட நேர்ந்தது. ஸத்யாக்கிரகத்தைப்பற்றியும் இதர வேலைகளைப் பற்றியும் யோசிப்பதற்கே எனக்குப்பாக்கியுள்ள காலமெல்லாம் வேண்டியிருந்தது. ஸத்தியாக்கிரகத்தைப்பற்றிய யோசனை இப்போதும் என்னுடைய நேரத்தை அதிகமாகக் கவர்ந்து வருகிறது.

நான் நண்பர்களுடன் கீதைவாசித்ததால் அவர்களுக்கு என்ன பலனேற்பட்டதென்று அவர்கள்தான் கூறக்கூடும். ஆனால் என்னுடைய நடத்தைகளுக்கெல்லாம் கீதையே எப்போதும் வழிகாட்டியாக இருந்தது. எனக்கு அதுவே தினசரி சந்தேகங்களைப் போக்கிக்கொள்ள உதவும் அகராதியாகிவிட்டது. அர்த்தம் தெரியாத ஆங்கிலப் பதங்களுக்கு டிக்ஷனரியில் பொருள்பார்ப்பது போலவே எனக்கேற்பட்ட சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளவும் கஷ்டங்களை நிவர்த்தித்துக் கொள்ளவும் கீதையை உபயோகித்து வந்தேன். அதிலிருந்து அபரிக்கிரகம் (விட்டுவிடுவது) சமபாவம் (சமமாக இருப்பதாக நினைக்கும் தன்மை) முதலிய பதங்கள் என்னைப் பிடித்துக்கொண்டன. அந்த சமபாவத்தை எவ்வாறு வளர்ப்பது என்பதுதான் முக்கிய பிரச்சினையாகிவிட்டது. அவமதிப்பாயும், இறுமாப்புடனும், கெடுதவழியும் நடந்துகொள்ளும் உத்தியோகஸ்தர்களுக்கும், நேற்றுவரை நம்மோடு சேர்ந்து வேலை செய்தவர்கள் அர்த்தமில்லாத ஆக்ஷேபங்களை எழுப்புவதற்கும், எப்போதுமே நம்மிடம் நல்லவர்களாக இருந்துவந்திருக்கும் மனிதர்களுக்கும் வித்தியாசம்பாராட்டக்கூடாதென்றால் அதன் அர்த்தமென்ன? ஒருவன் தன்னிடமுள்ள எல்லாவற்றையும் எவ்வாறு விட்டுவிட முடியும்? சரீரமே ஒருவித உடமையல்லவா? மனைவியும் குழந்தைகளும் உடைமைகளல்லவா? என்னிடமிருக்க புத்தகங்களையெல்லாம் அலமாரிகளுடன் கொளுத்திவிடுவதா? என்னிடமுள்ள அனைவற்றையும் தியாகம் செய்துவிட்டு அவரையே பின்பற்றவேண்டுமா? இவற்றிற்கு உடனே நேரான பதில் வந்துவிட்டது. என்னிடமுள்ள அனைவற்றையும் விட்டு விட்டாலொழிய நான் அவரைப் பின்பற்ற முடியாது. நான் ஆங்கிலச் சட்டம் படித்திருந்தது எனக்கு இப்போது உதவியாக இருந்தது. நியாயம் என்பதன் கொள்கைகளைப்பற்றி ஸ்னெல் விவாதித்திருந்தது என் ஞாபகத்திற்கு வந்தது. "தர்மகர்த்தா" என்ற பதத்தின் தாத்பர்யத்தைக் கீதையின் அனுபவத்திலிருந்து நான் விசதமாகத் தெரிந்துகொண்டேன். சட்டத்தில் எனக்குள்ள மதிப்பு அதிகரித்தது. அதிலும் மதமிருப்பதாக எனக்குத் தெரிந்தது. கீதையில் "அபரிக்கிரகம்" என்று கூறியிருப்பதற்கு நான் புதிய அர்த்தம் கண்டுகொண்டேன். கதி மோக்ஷமடைய விரும்புகிறவர்கள் தர்மகர்த்தாக்களாக நடந்துகொள்ள வேண்டுமென்றும், அவர்களிடம் அதிகமான சொத்துக்களிருந்த போதிலும் அவற்றில் சிறிதுகூடத் தம்முடையதென்று பாவிக்கக்கூடாதென்றும் நான் அதற்கு அர்த்தம் கொண்டேன். அபரிக்கிரகம், சமபாவம் இரண்டிற்கும் முன்னதாக மனோபாவம் அடியோடு மாறவேண்டுமென்பது பட்டப்பகல்போல் விளங்கிவிட்டது. ஆகவே என்னுடைய இன்ஷியூரன்ஸ் பாலிஸியை முடித்துவிடுமாறும், எவ்வளவு தூரம் அதற்காகப் பணம் பெறக்கூடுமோ அதை வாங்குமாறும், முடியாவிட்டால் இதுவரையில் கொடுத்த தொகைகளை நஷ்டமாக வைத்துக்கொண்டுவிடவேண்டும் என்றும் நான் ரவிசங்கர பாய்க்கு எழுதிவிட்டேன். ஏனெனில் என்னைமாத்திரமன்றி என் மனைவி மக்களையும் சிருஷ்டித்த பகவான் அவர்களைச் சம்ரக்ஷிக்கவும் ஏற்பாடு செய்துவிடுவாரென்று எனக்கு நிச்சயமாகத் தோன்றிவிட்டது. எனக்குப் பிதாவைப் போலிருந்த என்னுடைய சகோதரருக்கு நான் அதுவரையில் சேர்த்துவைத்திருந்த எல்லாவற்றையும் கொடுத்துவிடுவதாயும், ஆனால் இனிமேல் என்னிடமிருந்து ஒன்றையும் அவர் எதிர்பார்க்கக் கூடாதென்றும் இனிமேல் ஏதாவது மிச்சப்பட்டால் அது இந்திய வகுப்பினர்களுடைய நன்மைக்காகச் செலவழிக்கப்பட்டுவிடுமென்றும் நான் எழுதிவிட்டேன்.

என்னுடைய சகோதரர் இதை உணருமாறு செய்வது எனக்கு மிகவும் கஷ்டமாகவிருந்தது. அவர் என்னுடைய கடமை இன்னதென்று கண்டிப்பாக எழுதினார். தகப்பனாரைவிட நான் புத்திசாலியென்று நினைத்துக்கொண்டு விடக்கூடாதென்றும், அவரைப்போல் நானும் குடும்பத்தைச் சம்ரக்ஷிக்கவேண்டுமென்றும் அவர் கூறினார். அப்பா செய்ததைத்தான் நானும் செய்து வருவதாயும், ஆனால் "குடும்பம்" என்பதற்கு இன்னும் சற்று விரிவான அர்த்தம்கொள்ள வேண்டுமென்றும், என்னுடைய நடத்தை சரியானதென்று அப்போது விளங்குமென்றும் நான் தெரிவித்துக் கொண்டேன்.

என் சகோதரர் என்னைக் கைகழுவிவிட்டார். எனக்குக் கடிதம் எழுதுவதையும் நிறுத்திவிட்டார். எனக்கு அதனால் அதிக வருத்தமேற்பட்டது. ஆனால் என்னுடைய கடமையென்று நான் கருதுவதை விட்டுவிடுவது எனக்கு இன்னும் அதிக வருத்தமுண்டுபண்ணியிருக்கும். ஆகவே குறைந்த துக்கத்தை நான் பொறுத்துக்கொண்டேன். ஆனால் இது எனக்கு என் சகோதரரிடம் உள்ள பக்தியையும் பிரியத்தையும் பாதிக்கவில்லை. அது எப்போதும் போலவே அதிகமாயும் பரிசுத்தமாயுமிருந்து வந்தது. அவர் என்னிடம் கொண்டிருந்த அளவுகடந்த அன்புதான் அவருடைய வருத்தத்திற்கு மூலகாரணம். நான் குடும்பத்தினிடம் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டுமென்பதை அவர் அதிகமாக விரும்பினாரே ஒழிய என்னுடைய பணத்தை அவ்வளவாக வேண்டவில்லை. ஆனால் அவர் தமது கடைசிக் காலத்தில் என்னுடைய மனோபாவத்தைத் தெரிந்துகொண்டு பாராட்டினார். அவர் மரணவஸ்தையிலிருந்தபோது நான் செய்தது சரியென்றுணர்ந்து மிகவும் பரிதாபகரமான ஒரு கடிதத்தை எனக்கெழுதினார். தகப்பனார் பிள்ளையிடம் மன்னிப்புக்கேட்டுக் கொள்ளக் கூடுமானால், அவர் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அவர் தமது பிள்ளைகளை என்வசம் ஒப்புவித்து எனக்குத் தோன்றுகிற வழியில் அவர்களைப் பழக்குமாறு விட்டுவிடுவதாக எழுதியிருந்தது. என்னைப் பார்க்க ஆவலாக இருப்பதாகவும் அவர் எழுதினார். அவர் தென் ஆப்பிரிக்காவிற்கு வர விரும்புவதாகத் தந்தியடித்தார். அப்படியே வருமாறு நான் பதில் தந்தியடித்தேன். ஆனால் தெய்வம் அதற்கிடமளிக்கவில்லை. அவருடைய பிள்ளைகளைப் பற்றியும் அவருடைய விருப்பம் நடைபெறவில்லை. அவர் தென் ஆப்பிரிக்காவிற்குப் புறப்படு முன் இறந்துவிட்டார். அவருடைய பிள்ளைகள் பழைய முறையில் பழக்கப்பட்டிருந்தனர். ஆகையால் அவர்களுடைய வாழ்வைத் திருப்ப முடியவில்லை. நான் அவர்களை என்னிடம் கொண்டுவர முடியவில்லை. அது அவர்களுடைய தவறல்ல. "எவர்தான் தமது இயற்கையின் போக்குபோக்கி, இவ்வளவுதான் நீ செல்லலாம்; மேலே போகக்கூடாது என்று கூறமுடியும்?" ஒருவருக்குப் பிறவியிலேயே இயற்கையாக உள்ள அசைக்கமுடியாத தோற்றங்களை எவர்தான் அகற்ற முடியும்? ஒருவர் தமது குழந்தைகளும் தன்னைப்போலவே ஒரே முறையைப் பின்பற்றுவார்களென்று எதிர்பார்க்க முடியாது. பெற்றோராயிருப்பதன் பொறுப்பு எவ்வளவு கடுமையானதென்பதைக் காட்ட இந்த உதாரணம் உபயோகமாயிருக்கிறது.

---

**தீண்டாமை**

**யென்ற பேயை**

**நமது தேசத்தை விட்டுத்**

**துரத்துங்கள்.**

---

## அதிரசக் கூட்டம்.

பிரயாணி:—துரைகளே! இத்தென்னிந்திய ரெயில்வண்டியில் மனிதர்களை இரக்கமின்றி புளிமூட்டை அடுக்குவதுபோல் அடைத்தனுப்பும் கெட்ட வழக்கத்திற்கு எப்போது விமோசனங்கிடைக்கக்கூடும்.

மாஸ்டர்:—பிரயாணிகள் ஒருவண்டியில் இத்தனை பேர்கள் இருக்கலாம் என எழுதியிருப்பதற்கு விரோதமாக ஏறாமல் பிளாட்பாரத்தில் நின்றுகொண்டு, இடம் தயார்செய்து கொடுக்கிறீர்களா இலதேல்பணத்தை வாபீஸ் கொடுக்கிறீர்களாவென்று ஒற்றுமையுடன் ஜனங்கள் உறுதியாய் தைரியத்துடன் ரயில்வே அதிகாரிகளை எப்போது கேட்கிறார்களோ அப்போதே விமோசனம் கிடைத்துவிடும்.

* *

கிராமத்தான்:—பட்டரே! ரெட்டாலத் தீட்டு; செட்டலாராதே; எட்டில் இல்லென்று திட்டுகிறீர்களே, இக்கெட்ட வழக்கம் உங்களை விட்டொழியும் காலமெக்காலம்?

பட்டர்:—பட்டருக்குக் கொடுத்தால் மோட்சமென்றெண்ணும் முட்டாள்தனம் என்று நீங்குமோ அன்றுதான்.

* *

வினா:—மையில் எம்மை பெருமை?

விடை:—பொறுமை.

வினா:—தானத்திற்சிறந்தது எது?

விடை:—நிதானம்.

---

## காப்பிக்குடியின்கேடு.

(1) காப்பி, முதலிய காரசக்குடிகள் உடலுக்கு கெடுதியென்று கண்டிக்காத பெரிய டாக்டர்களே கிடையாது.

(2) காப்பிக் கொட்டையில் "காபீன்" என்றவிஷமும் டீயில் "டானின்" என்றவிஷமும் இருக்கின்றன. விஷங்கள் உடனே கொல்லாமல் நாளடைவில் சரீரபலத்தைக் குறைத்து வியாதிகளை உண்டு பண்ணுகின்றன.

(3) காப்பி "சுறுசுறுப்பு" கொடுப்பதென்பது ஒரு மயக்கம். கள் வெறியிலும் அப்படித்தானல்லவா? ஆனால் காப்பிகுடித்த சிறிது நேரமெல்லாம் அவ்வளவுக்கவ்வளவு உடம்பும் மூளையும் தெரியாது விடுகிறது. காப்பி ஒரு போதை வஸ்து.

(4) காப்பி ஜீரண சக்தியைக்கெடுத்து பசியை மந்திக்கச்செய்து மலச்சிக்கலை உண்டுபண்ணும் என்று "ராபர்ட்ஸ்" என்னும் பெரிய டாக்டர் கூறுகிறார்.

(5) காப்பி தலைவலி, கிறுகிறுப்பு, மயக்கம், தூக்கமின்மை முதலிய மூளை வியாதிகளையும், பித்த ரோகத்தையும் உண்டுபண்ணுகின்றது.

(6) காப்பியினால்மலச்சிக்கல்நிவர்த்தியாதல் என்பது பிரமையே. காப்பியின் சூடே மலப்பிரவிர்த்திக்குக் காரணம். குளிர்ந்த ஜலம் அல்லது வெந்நீரை எழுந்தவுடன் சாப்பிட்டால் மலப்பிரவர்த்தி சுலபமாக ஆகும்.

(7) ஒரு உழக்கு மூத்திரத்திலுள்ள மூத்திர ரச அளவைவிட ஒரு உழக்குக் காப்பியில் மூத்திர சத்து அதிகமிருக்கிறதென்று டாக்டர் ஹெல்லக் பரிசோதித்திருக்கிறார். இதனால் மூத்திர கருவிகளுக்குவேலை யதிகமாகி நீரழிவு முதலிய மூத்திர ரோகங்கள் உண்டாகின்றன.

(8) இரத்தக்குழாய்களைக் கெடுத்து, ஹிருதய கோசத்தைத் துர்ப்பலப் படுத்தி ரத்தத்தையும் கிறக்கச்செய்கிறது.

(9) ஸ்திரீ புருஷர்களின் வீர்ய சக்தியைக் குறைத்து சந்தான சம்பத்தையுங் குறைத்துவிடுகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பலதிரட்டு.

மகாத்மா காந்தியை ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் நந்திமலையில சந்திக்கும் போது காங்கிரஸ்காரர் வழக்கமாய்க் கதா அணியவேண்டுமென்னும் நிபந்தனையில் சற்று இரக்கங்காட்ட வேண்டுமெனக் கேட்டாராம்.

* *

ஒன்று கதரை வழக்கமாய் அணிந்துவர வேண்டுமென்றிருக்க வேண்டும்; இல்லையேல் காங்கிரஸினின்றும் கதா அணிதலைப்பற்றிய பிரிவையே எடுத்துவிடவேண்டுமென கௌஹாத்தியில் கூறினேன் என்று ஸ்ரீநிவாசயயங்காருக்கு மகாத்மாகாந்தி பதில் கூறினும்.

* *

தனக்குத் தெரிய பீடர் என்ற ஒளிக்கு 127 வயதாகிறதாக அதன் சொந்தக்காரரான கர்னல் பெர்ரிஸ் கூறுகிறார். இவர் அறிவு சற்கு முன்னர் எவ்வளவுகாலம் ஜீவித்திருக்கலாமென்பது ஆராய்ச்சிக்கு விடப்பட வேண்டும்.

* *

அமெரிக்கா மிஸிஸிபி ஆற்றில் உள்ள ஒருவகை மீன் நாய்க்குட்டியைப்போல் குரைக்கிறதாம். அதற்கு நான்கு சிறகுகளும் இருக்கின்றனவாம்.

* *

அமெரிக்காவில் அலாஸ் காப்பகுதியில் வசிக்கும் நரிகள் கற்புடையனவாம். தன்னை மனைவியாகக் கொண்ட ஆண்நரி இறந்தால் வேறு நரியை விரும்புவதில்லையாம். இதேபோல் ஆண்நரிகளும் வேறு பெண் நரிகளைத் தேடுவதில்லையாம்.

* *

அமெரிக்காவில் பெயர்பெற்ற நாடகப் பெண்ணான மிஸ்மே மார்வே என்பவன் 50000 பவுனுக்குத் தன்னுடைய புன்னகையை இன்ஷியூர் செய்திருக்கிறாளாம் அடுத்த பத்து வருஷத்திற்குள் நோய் அபாயம் முதலிய எந்தக் காரணத்தாலாவது அவளுடைய புன்னகையின் அழகும் இனிமையும் குறைந்தால் இன்ஷியூரென்ஸ் கம்பெனி மேற்படி தொகையைச் செலுத்திவிட வேண்டுமென்பது நிபந்தனையாம். இன்னும் பல நாடகமாதர்கள் இப்படியின்றி தங்கள் கால்களையும் கண்களையும் இன்ஷியூர் செய்திருக்கிறார்கள்.

* *

அமெரிக்காவில் ரப்பர் சாகுபடியைப் பெருக்க அமெரிக்கக்கூலிகளின் அதிகச் சம்பளத்தால் கட்டாசாகவிருக்கிறதென்றும், ஆயிரக்கணக்கான இந்தியக் கூலிகளைக் கூட்டிவந்தால் இப்பஞ்சம் தீருமென்றும் காப்டன் ஆர்தா ஹெர்பர்ட்வாகன் வில்லியம்ஸ் கூறுகிறார்.

* *

சேலத்தில் இடிவிழுந்து ஒரு ஆதிதிராவிடச்சிறுவன் உயிர்நீத்தான்.

* *

ஒரு ஜெர்மன் வியாபாரியின் மகன் கல்கத்தாவில் ஹிந்துவாகி ஒரு வங்காளியை மணமுடித்திருக்கிறான். அம்மாதின் புதிய பெயர் திலக்குமாரி தேவி.

* *

ஒன்றரைமாதம் வரை மகாத்மா காந்தி நந்திமலையில் தங்கியிருந்ததில் பூரண சௌக்கிய மேற்பட்டிருக்கிறது. தற்போது பெங்களூரில் இராஜாவின் பங்களாவில் தங்கிவருகிறாராம். அடுத்த மாதம் சுற்றுப்பிரயாணம் ஆரம்பமாகலாமெனத் தெரிகிறது.

* *

கல்கத்தாவில் ஒரு தபாற் சேவகனிடம் இருந்த தந்திமணியார்டர் ரூ 1500யை ஒருவன் பலாத்காரமாக வாயில் துணியைத் திணித்து கட்டிக்கொண்டு ரூபாயை அபகரித்துச் சென்றான். இது விசாரணைக்கு வந்ததும் அத்தபாற் சேவகனே தனது ஆளை ஏற்பாடுசெய்து இவ்விதம் உலக மயக்காகச்செய்துகொண்டதாகத் தெரியவந்து சேவகன் கைது செய்யப்பட்டிருக்கிறான்.

* *

சீனத்தில் பிச்சைக்காரர்களுக்கும் கூட்டகாட்டங்கள் உண்டாம். தெருக்களில் அவர்கள் யாசித்துப் பணந்தேடுதற்காக நகரசபைக்கு வரி செலுத்தவேண்டுமாம். நகரசபையில் பணநெருக்கடி ஏற்படவே பிச்சைக்காரர் வரியையும் கூட்டும்படியாக நேர்ந்தது. இதையறிந்து பிச்சைக்காரர் சங்கம்கூடி பிச்சையெடுக்கப் போகாமல் வேலை நிறுத்தம் செய்தனராம். இது ஒருவழிக்கு ஜனங்களுக்கு லாபகரமே எனினும் அதிகாரிகளுக்கு அவமானகரமாயிருந்ததால் வரியைக் கூட்டாது பழயபடியே வாங்குவதெனத் தீர்மானித்தனர். பிச்சைக்காரர்களும் வழக்கப்பிரகாரம் யாசகத்திற்கேகினர்.

* *

திருச்சி போலீஸ் டிப்டி சூப்பிரன்டென்டெண்டு ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ணசாமிஐயர் அடுத்த ஊர்களுக்கு குடும்பத்துடனும் தனது மருமகனுடனும் முகாம் சென்றிருந்தார். கொள்ளிடம் கரையில் வந்திருக்கும் போது கையில் துப்பாக்கி வைத்துக் கொண்டு ஒரு மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டிருக்கையில் குண்டு வெடித்து மருமகன் மார்பில் ஊடுருவிச் சென்று சவமானானெனத் தெரிகிறது.

* *

பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஒரு கோழி 365 நாளில் 351 முட்டையிட்டதாம். இதை 200 பவுன் வரை விலைக்குக் கேட்கிறார்களாம்.

* *

சில பூச்சிகளுக்கு காலில் காது இருக்கிறதாம்.

* *

சர்வ சாதாரணமாக யாதொரு விதக் கெடுதிக்குள்ளாகாமல் கண்ணாடிகளை விழுங்கும் நீக்ரோவன் ஒருவன் இங்கிலாந்திலிருக்கின்றனனும்.

* *

மீன் நீரை உட்கொண்டு வெளியே விடுவது பிராணவாயுவை உட்கொள்தற்குமட்டுமின்றி நீந்துவதில் வேகமும் உண்டாகிறதாம். இது தண்ணீரில் நீந்துபவர் காலைப்பின்னுக்கு உதைப்பதால் முன்னேறிச் செல்லுவதற்கு தவியாயிருத்தல் போலாம். இதேபோல் கப்பல்களுக்கும் அமைத்தால் இப்போதுள்ள வேகத்தைவிட சற்று அதிக வேகங்கொள்ளுமென ஒரு ஜெர்மன் நிபுணர்கூறுகிறார்.

* *

மனிதர்களின் உடல் மேற்றோல் பெரிய சாக்கடையாகும். தினம் தோலின்வழியாக 30 அவுன்ஸ் நிறை அசுத்தம் வெளியேறுகிறதாம். தோலிலுள்ள துவாரங்கள் 70 லட்சமாம்.

* *

உலகத்திலேயே அதிகத் தண்ணீர் அருந்தக்கூடிய ஜப்பானியர் அதிகமாய் வியாதியின்றி வாழ்கிறார்களாம். இதனால் உடல் நலத்திற்கு அதிகமாய்த் தண்ணீர் குடிக்கலாமென்பதாகிறது.

## பௌத்தமத ஸ்தாபக ஞாபகார்த்தம்.

அசோக சக்ரவர்த்தியின் குமாரரான "மிஹிந்து" என்ற இளவரசர் பௌத்தமத சன்னியாஸம் பூண்டு கி. மு. சுமார் 280வது ஆண்டில் இலங்கையில் ஸ்ரீ புத்தபகவானின் மறையை ஸ்தாபித்ததின் ஞாபகார்த்தத்தை வழக்கம்போல் இவ்வருடமும் மிக விமரிசையுடன் கொண்டாடினார்கள். மூன்று யானைகள் வெள்ளியாலான மத்தின்னமாக உள்ளகும்பத்தைச் சுமந்து பவனிவாமேற்படி ஸ்தாபகரின் உருவப் படத்துடன் மிகவிமரிசையாய் கடந்த 12-6-27ல் ஊர்வலத்துடன் கொண்டாடினார்கள். அசோக சக்ரவர்த்தியின் குமாரரும் குமாரத்தியான சங்கமித்தாவென்ற இளவரசியும் காயாசம்பூண்டு இங்கு பௌத்தமதம் ஸ்தாபித்து இத்துடன் 2207 வருடங்களாகின்றனவாம். இவ்வரசிளங்குமரியாவேயே முதலாவதாக இங்கு போதிமரவென்ற அரசாங் கொண்டுவந்து அனுராதபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாம். மிஹிந்து வென்ற அரசகுமாரரால் முதலாவதாக போதம் பெற்றவர் அக்காலம் அரசுரிமை பூண்டிருந்த தேவாநம்பிய திசாவென்ற அரசன். இவர் அனுராதபுரத்திலேயே அரசுரிமை பூண்டிருந்தாராம்.

கி. மு. மி. மிக்கேல்அந்தோணிநாடார்
கொழும்பு.

## இலங்கை நாடார் மகாஜனங்களுக்கு ஓர் வேண்டுகோள்.

(ஒரு நிருபர் எழுதுகிறார்.)

குபேரனாடெனப்பேரும் பெருமையும்பெற்ற இவ்விலங்கைத் தீவில் வதியும் நம்மனோரின் தொகை அநேக ஆயிரமாக மதிப்பிடப்படலாம். உத்தியோக நிலையிலும் வியாபார நிலையிலும் தொழிலாளர் என்ற முறையிலும் தங்கள் இவ்வாழ்க்கைக்கனுகுணமாய் உஜ்ஜீவிக்கின்றனர். ஆயிரக்கணக்கான நம்மவர்கள் வதிந்துவந்தும் குல க்ஷேமசுகந்திய ஸ்தாபனமொன்றேனும் உன்னத நிலையிலிருக்கின்றதா? என்ற கேள்விக்கு இடம் ஏற்படுகிறது. இவ்விலங்கையில் பாரதபுத்திரர் பல் வகுப்பினர் வாழ்ந்து தங்கள் தங்கள் சமுக எதிர்கால க்ஷேமசுகந்தி ஏற்படுத்தியிருக்கும் பொதுஸ்தாபனங்கள் எவ்வளவு மேம்பாடுற்று வருகின்றன!

இவைதை கண்கூடாக்கண்டும்வாளாவிருப்பது [illegible]தியோ? குலதர்மமா? இலங்கை [illegible]த்திய க்ஷத்திரிய நாடார் சங்கம் தற்போது என்ன நிலையில் இருக்கின்றதோ தெரியவில்லை. அதன் மூலமாய் வசூல் செய்யப்பட்ட பொதுப் பணம் எங்கிருக்கின்றதோ? அதுவும் தெரியவில்லை. குலநலம் கருதி வெளிவரும் ஸ்தாபனங்கள் கும்பகர்ணன் சாகவாசம் செய்வது இக்காலம் எற்குமோ? ஷை சங்கக் காரியதரிசி என்போர் சிறிது இதை கவனித்தல் வேண்டும். தனிப்பட்ட எவருடைய சொந்தக்கருமத்திலும் எவரும் தலையிடார்—பேசார். பொதுக்கருமங்களில் ஏனோ, தானோ, இவரோ பிரதிநிதியென்றிருந்தால் நமது ஜனப்பெரியோர் என்று பட்டம் ஏற்கமுடியுமா? ஆகவே தற்போது புறக்கோட்டை முதலாம் குறுக்குத்தெரு 28 நீர் கட்டடத்தில் நிறுவப்பட்டிருக்கும் இரத்தின விலாஸ் நாடார் ஹோட்டல் ஒன்றே இலங்கை தேசத்தில் நமது குல மக்களின் க்ஷேமத்தையும் மானத்தையும் சுயமரியாதையையும் காக்கும் பொது ஸ்தாபனம் என்று தைரியமாய்க் கூறுவோம். அதை உருவகம் செய்யவெழுந்த அபிமானிகளுக்கு இக பரபுண்ணியம் இரண்டும் கிடைக்க ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இக்காலம் வாய்வேதாந்தம் பேசுகிறவர்களுக்கு அடுத்ததல்ல. நீதி, சத்தியம், அன்பு முதலியவைகளைத் தாங்கி செயற்கையளவில் நின்று சாதிப்பவர்களே வரப்போகும் காலத்தில் தலைவரெனவும் பெரியோரெனவும் பிரதிநிதிகளெனவும் பெயர் பெறுவர்.

ஆகவே இரத்தின விலாஸ் நாடார் ஹோட்டல் வியாபாரத்துறையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸ்தாபனம் தானே என்று கருதாமல், நம்மவர்களின் சுயமரியாதையைக்காக்க வெழுந்த ஓர் ஸ்தாபனம் என்று உள்ளத்தில் நோக்கி உவகைபூத்த அன்புடன் கொண்டாடப் பிரார்த்திக்கின்றோம். இலங்கையினின்று இந்தியா செல்பவர்களும் இந்தியாவினின்று இலங்கை வருபவர்களும் குடும்பவாழ்க்கையை மேற்கொண்டவர்கள் கொழும்புநகரில் எவ்விடம் கியிஷம் தங்கி தங்கள் சுயமரியாதையைக் காத்துக்கொள்வார்கள்? திருநெல்வேலி நாட்டினின்று வடஜில்லாக்களுக்கு வியாபார மார்க்கமாய்ச் சென்ற தக்ஷணநாடார் பெருமக்கள் ஒவ்வொரு இடமும் பேட்டைகளாகிய கோட்டைகளைக் கட்டினர். எதற்கு? மானத்தையும் சுயமரியாதையையும்காக்கும் பொருட்டே. வீண் வாய்வேதாந்தம் எற்றுக்கு?

ஆகவே இலங்கையில் வதியும் நாடார் பெருமக்கள் இரத்தினவிலாசத்தை அடுத்து சுயமரியாதையைக் காத்துக் கொள்ளுங்கள்.

## சாதிவித்தியாசத்தை ஒழியுங்கள்.

## 3-வது வருட நிறைவிழா.

காவல்கிணறு கத்தோலிக்நாடார் ஐக்கியசங்கம், கொழும்பு.

12-6-27ல் 3—வது வருடப் பூர்த்திவைபவமானது அன்றிரவு சுமார் 8—மணிக்கு, கொழும்பு யூனியன் பிளேஸ், 65 நீர் கட்டடமாகிய ஸ்ரீமான் க. கு. பேதுருநாடார் வர்களின் வர்த்தகசாலையில் மகா-ள-ள-ஸ்ரீ சோ. ஞா. வியாகுல மரியநாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. செடிகொடிகளாலும் மலர்மாலைகளாலும் அகமும் புறமும் அலங்காரமாய் சோடிக்கப்பெற்றிருந்ததோடு, திருப்பீடம் சிங்காரமாய் அமைக்கப்பெற்றிருந்தது. காரியதரிசி ஸ்ரீமான், கு. அ. செ. ஐயாக்குட்டி நாடாரவர்களும் பரிசோதகர் ஸ்ரீமான், வி. வி. அந்தோணிமுத்து நாடாரவர்களும், உபயஞ் செய்த ஹார்மோனியம் தாளமேளத்துடன் பஜனைக் கோஷ்டிகள் முழங்கப்பரமானந்தம் விளைவித்துக் கொண்டேயிருந்தன. அவ்வமயம், பன்னிரண்டுக்கணக்காக விஜயம் செய்திருந்த கனவான்களை, வரவேற்புக்கமிட்டி சேர்மனுகிய மகா-ள-ள-ஸ்ரீ ச. மிக்கேலந்தோனி நாடாரவர்கள், வரவேற்று உபசரித்தனர். குறித்த நேரமானதும் பக்தியோடு முளந்தாள் படியிட்டு சேசுவின் திரு இருதயத்தின் பேரில் உருக்கமான ஜெபமொன்று ஜெபிக்கப்பட்டதும், காரியதரிசி யெழுந்து விஜயம்செய்திருந்த கனவான்களை ஒருங்கே வரவேற்று நல்வருகை கூறினர். ஸ்ரீமான் ம. மரிய செபஸ்தியா நாடாரவர்கள் கடவுள் வணக்கம் பாடியதும் நிகழ்ச்சிமுறையாரம்பமாயிறறு. பிரஸிடெண்ட் மகா-ள-ள-ஸ்ரீ கோ. ஞா. வியாகுலமரியநாடாரவாகளே அக்கிராசனம் வகிக்க வேண்டுமாய் காரியதரிசியால் பிரேரிக்கப்பட்டு சர்வ சம்மதக்கரகோஷத்தினிடையே தலைவர் ஆசனத்தமர்ந்தனர். உடனே ஸ்ரீமான் கோ. மா. மயிர்தநாடாரவர்கள் சங்கத்தின் சார்பாக சபாநாயகர் முதல், நிர்வாக உத்தியோகஸ்தர்களனைவர்க்கும் புஷ்பகாரமணி வித்தனர். (காரியதரிசி) தமது பேராலும் தமது சகாக்களான நிர்வாகிகள் பேராலும் அங்கத்தினரனைவர்க்கும் நன்றிகூறி முடிவுரையாடினார். ஸ்ரீமான் உப. ச. குசைநாடாரவர்கள் கற்றோராய்தலென்னும் பொருள்பற்றி உபந்நியாச சொற்பொழிவு நிகழ்த்திக் குதூகல மூட்டினார். இடைக்கிடையே பஜனைக்கோஷ்டிகள் முழங்கிப் பாமானந்தம் விளைவித்துக்கொண்டேயிருந்ததோடு,பார்ப்பவர் மனமெல்லாம் பரவசமுற்றிருந்தது. ஸ்ரீமான் ம. அந்தோனிமுத்து நாடாரவர்கள் வசனசல்லாபம் நிறைந்த வர்த்தனோபசாரமும் இகபர, அரசவாழ்த்தும் இனிது கூறினர். காரியதரிசியெழுந்து முடிவுரை கூறியதும் உப காரியதரிசி ஸ்ரீமான் ப. ச. பரஞ்சோதி நாடாரவர்கள் நன்கொடையால் சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று கீத, நாத, மேளத்துடன் வெகு மங்களமாய் இரவு 1 மணிக்கு கூட்டம் சிறப்புற்று இன்பமுடன் இனிது கலைந்தது. வைஸ் பிரஸிடெண்ட் ஸ்ரீமான் தேவ. ஞா. தேவசகாய நாடாரவர்கள் ஷை சங்கத்திற்கு ஒரு பெஞ்சு நன்கொடையளித்தனர் என்று ப. ச. பரஞ்சோதி நாடார் எழுதுகிறார்.

## நூதன முறை.

ஜப்பானில் பழைய பட்டுக்குட்டைகள், துணிகள், சட்டைகள் முதலியவற்றை இனி எறிந்துவிட வேண்டியதில்லையாம். அவைகளைப் புத்தப்புதிதாகச் செய்ய டாக்டர் பி. பி. வான் வீமான் என்பார் வழி கண்டு பிடித்திருக்கிறார். பழைய பட்டுக்களை ஒருவித திராவகத்தில் நனைத்தால் ஜலமாகிப் பிறகு பசைபோல மாறிக் கடைசியில் நல்ல பட்டு நூலாகச் செயயப்படுகிறதாம். இயற்கைப்பட்டைவிட இது சேர்த்தியாக இருக்கிறதாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்
பிரபவ ௵ ஆனி ௴ ௰௩ ௨

## கோயம்புத்தூர் மகாநாடு.

இம் மகாநாடு வருகிற ஜூலை மாதம் 2, 3 உ களில் கோயம்புத்தூரில் கூடப்போகிறது. பார்ப்பனரல்லாதார் கூட்டம் இதற்கு முன் எத்தனையோ கூடியிருந்தாலும், இம் மகாநாடு மிக முக்கியமானதென்று கருதப்படுகிறது. இதன் முடிவை நம் நாட்டார் மட்டுமல்ல பிரிட்டிஷ் பார்லிமெண்டாருங் கூட வெகு கவனமாக எதிர்பார்க்கக்கூடும்.

பிராமணரல்லாத பெருந் தலைவர்கள் பலர் காங்கிரஸ் வாதிகளாயிருந்தாலும், பலர் காங்கிரஸ் கொள்கைக்கு மாறாக இருந்து வந்திருந்தாலும் இச்சமயம் எல்லோரும் ஒன்று சேர்கின்றார்கள். சில ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் காங்கிரஸைக் கைப்பற்ற வேண்டுமென்றும், சிலர் காங்கிரஸிலிருக்கும் பிராமணரல்லாதாரும் பிரிந்து வந்துவிட்டால் பார்ப்பனரல்லாதார் வலுப்படலாமென்றும் கருதுகிறார்கள். இவ்விரண்டு விதமான அபிப்பிராயங்கள் ஒன்றையொன்று வென்று தம் வயப்படுத்திக்கொள்ள வெண்ணுவதால் மகாநாட்டின் முடிவை மிக ஆவலுடன் யாவரும் எதிர்பார்க்கக்கூடும்.

டாக்டர் நாயரும், ஸர். தியாகராயரும் பழுத்த காங்கிரஸ் அபிமானிகள். அவர்கள் அக்காலத்திலேயே பிராமணர்கள், காங்கிரஸின் பேரால் அரசியலைக் கைப்பற்றி உத்தியோக வேட்டையும், சமூகத்தில் தகாத கட்டுப்பாட்டையும் நடாத்தும் கொடுமைகளைக் கண்டு சகிக்காமல் ஜஸ்டிஸ் கட்சியை நிர்மாணித்து அரசியலையும், சமூக சீர்திருத்தத்தையும் கவனித்து வந்தார்கள். பார்ப்பனரல்லாத மக்கள் சற்றே விழிப்படைந்தார்கள். பார்ப்பனக் கொடுமையும் ஒருவாறு இறந்துபட்டுவிட்டதென்று செப்பலாம். மகாத்மா காந்தி தலைமையேற்கவும், காங்கிரஸிலும் அவர்கள் வாலாட்ட முடியாமற் போய்விட்டது. இவ்வாறு செத்துப்போன ஐயங்கார் கட்சி, தாஸ் வாலைப்பிடித்துக் கொண்டு 'சுயராஜ்யக் கட்சியெனும் மோகினி ரூபமெடுத்து காங்கிரஸை மயக்கி, மகாத்மா காந்தியை விலக்கி, ஜஸ்டிஸ் கட்சியை மூர்ச்சிக்க வைத்து காங்கிரஸ் கமிட்டியையும், மந்திரிமார்களையும், போடு காணமென்றால், எண்ணிக்கொள் சாமி! என்கிற நிலைமைக்கு வரவே பிராமண மகாநாடு கூடி பழய கொள்கையை விடக் கூடாது; பார்ப்பனரல்லாதாரையும் ஒரு கை பார்ப்பதென்று உறுதியாய்விட்டது.

அரக்கரால் அடிபட்டுக் கலைப் புண்ட தேவர்களுக்கு அபயஸ்தங் கொடுத்த ஸ்ரீஇராமசாமியைப் போல் ஈ. வி. இராமசாமி—ஈ—வி—ரக்கமுள்ள இராமசாமி இதயங் கனிந்து தோற்றுப் போன ஜஸ்டிஸ் கட்சிக்கு அபயஸ்தங் கொடுத்து மூர்ச்சித்துப் போன திருவாளர்களை சுயமரியாதை என்னும் சஞ்சீவியால் தெளிவித்து, பிரிட்டிஷ் ஆட்சியின் பிசகுகளைப் பார்க்கிலும் அவர்களுக்கு முன் வந்த பிராமணாட்சியில் பெரும் பிசகுகளிருக்கின்றன; முன் வந்த கொடுமையை முதலில் தொலைத்துவிட்டால் பின் வந்தது தானே தொலைந்து விடுமென்ற தாரக மந்திரத்தை உபதேசிக்கவே தமிழ் நாடு தலை தூக்கி நிற்கிறது. பழந் தமிழ் வீரம் பொலிந்து விளங்குகிறது! ஐயர், ஐயங்கார் ஆச்சாரியார், சாஸ்திரியார்களின் பொய்யும், புளுகுகளும் வெளிப்பட்டுவிட்டன. ஜஸ்டிஸ் கட்சி புத்துயிர் பெற்றது; காங்கிரஸுக்கு ஜீவ நாடி அடிக்கிறது; ஐயங்காருக்கு தேகம் நடுங்குகிறது; சத்தியமூர்த்திக்கும் தடுமாற்றமேற்பட்டுவிட்டது. இந்நிலைமையில் ஜஸ்டிஸ் கட்சி காங்கிரஸைக் கைப்பற்றுவது ஐயங்காருக்கு உதவி செய்ததாகுமேயன்றி சமூகத்திற்கு உதவி செய்ததாகாது ஆகாது.

வட நாட்டிற்கு சென்று புளுகி வந்த புளுகுகளை மறைப்பதற்கு சென்னையில் நடக்க விருக்கும் காங்கிரஸை சிறப்பிக்கும் பொறுப்பு ஐயங்காருக்குடையது. அதற்காக அவர் நாடெங்குஞ் சுற்றுகிறார்; ஊளவும் பார்க்கிறார்கள்; அவர்களதைச் செய்யட்டும்; வேதாளக் கதைபோல் மீண்டும் ஜஸ்டிஸ் கட்சி இச்சமயம் காங்கிரஸை நோக்குவது பிராமணரல்லாத சமூகத்துக்குக் கொடுமை செய்ததாக முடியும் சாந்த மூர்த்தியாகிய மகாத்மா காந்தி தலைமை வகித்து 'சோ வாரும் செகத்தீரே!' என்று அழைக்கும்போது வாளாவிருந்து விட்டு அவரும், அவருடைய உண்மைச் சீடர்களும் காங்கிரஸ் காற்று ஒத்துக் கொள்ளாமல் நந்தி மலையிற் போய் குந்திக் கொண்ட போது, காங்கிரஸை நோக்குவது வெட்கப்படத்தக்கது. தமிழ் நாட்டிற்கே அவமானமாகும். மகாத்மாவுக்கு உதவி செய்யாமல் வஞ்சகர்கட்குதவி செய்வது தோஷமுமாகும். இது சமயம் காங்கிரஸை நோக்குவதால் வருங் கெடுதிகளை "குடியரசு" ஒன்றையும் விடாமல் எழுதி வந்திருக்கிறது. அதை மறுத்து இன்னும் வேறு சரியான வழி ஒருவரும் காட்டவில்லை. நம் முன்னிற்பது சமூக சீர்திருத்தம், சமூக ஊழியம், சுயமரியாதை. அதன் பிறகுதான் சுயராஜ்யம். ஆகையால் தமிழ் நாட்டு வீரந் தலை தூக்கி நிற்பதை தணித்துப்போய் விடச் செய்யாமல் ஒவ்வொரு தமிழரும் கோயம்புத்தூர் மகாநாட்டில் கவனித்துக்கொள்ள வேண்டும்.

பேரூக்கம் பெற்றிருக்கும் பிராமணரல்லாத சமூகத்தை—வைக்கம் வீரர் மனோவுணர்ச்சியிற் பிறந்த சுயமரியாதைக் கூட்டத்தை இப்போது பிளந்து உடைத்தெறிய வேண்டியது ஐயங்கார் கடமைகளில் ஒன்றாயிருக்கலாம். ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றிப் பிடித்து அபிமானத்துடன் காங்கிரஸுக்கு அழைக்கவருபவர்களில் அநேகர் ஐயங்காரின் ஆட்களாயிருக்கலாம்; சிலர் விஷமக்காரராயுமிருக்கலாம். ஆகையால் தமிழ் மக்கள் ஏமாந்துபோகாமல் சாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்கின்றோம்.

சமூகத் தொண்டை தலைமேற்கொண்ட ஸ்ரீமான் நாயக்கர் பெற்ற அரும் பெரும் புதல்வராகிய சுயமரியாதைச் செல்வனை கொன்று புதைக்கக் காங்கிரஸில் குழி தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். இராமசாமியைப் பிரிப்பதற்கு மாரீச மாய மான்கள் வந்து விளையாடுகின்றன. பொய் மானைக் கண்டேமாந்து போகாமல் நாயக்கர் சகாக்களாகிய லட்சுமணர்கள் சுயமரியாதை யெனுஞ் சீதையைக் காப்பாற்றுவார்களாக. காங்கிரஸை மகாத்மா காந்தி தலைமையேற்க வரும் வரையும் சுயமரியாதைப் போரை விடாமற் றொடர்ந்து நடத்துவார்களா? மகாத்மா காந்தி இன்றைக்கே தலைமை ஏற்க வருவாரானாலும் நாமிப்போதே செல்லலாம். அதன்றி இன்னும் ஐயங்காரின் கீழ்கப்பட்டுக் கொண்டு துன்புற வேண்டாமென்று எச்சரிக்கின்றோம்.

அதிகாரவர்க்கத்தால் ஆட்சி முறை கெட்டுப்போய் அரசாங்கப் பெயருக்கு ஊனம் ஏற்படுவது போல், ஐயங்கார் வர்க்கத்தால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பெயர் கெட்டு காங்கிரஸிற்கே சென்னையில் ஆபத்து வந்துவிடும் போல் காண்கிறது. சாகப்போகிற காங்கிரஸுக்கு உயிர் கொடுப்ப தென்றால், உயிர் நாடிக்கு மிருத்தியுவாய் முன் வந்து நிற்கும் எமக் கோட்டான்கள் நிற்க வேண்டும்; அப்போதுதான் உயிர் பெற்றெழும்பும். அதற்கு முன் யார் தலையிட்டாலும் சாகவைத்த தோஷத்தை அவர்கள் தலைமேலேற்றி தலை குனியச் செய்துவிட்டு ஐயங்கார்கள் தந்திரமாய்த் தப்பித்துக் கொள்வார்கள். ஐயங்கார் மீது ஐயமில்லை யென்று அவர்கள் பத்திரிகைகளெல்லாம் பறை முழக்கஞ் செய்யும். ஆகையால் கோவை மகாநாட்டுக்குப் போகும் பிராமணரல்லாத பெருந்தகையினர்கள் இது சமயம் காங்கிரஸ்க்காதரவு கொடுத்துவிடாமல் மகாத்மா காந்தி வரும்வரையும் சுயமரியாதைப் பிரகலாதனுக்குத் துணைபுரிவதென்று ஏக மனதாய்த் தீர்மானிப்பார்களாக.

தீண்டாமை, மது விலக்கு, கதர் முதலிய நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றச் செய்வார்களாக. அத்யாவசியமாக முன் வந்து நிற்கும் கோயில் பிரவேச விஷயமாய்க் கொஞ்சமுந் தாமதமின்றிச் சரியான ஒரு முடிவு செய்வார்களாக.

மகாத்மா காந்தி தாம் வரும்போது பிராமணரல்லாத பேருக்கம் இவ்வாறென்று அறியும் வண்ணம் அனைத்தும் செய்ய ஆன தீர்மானங்கள் செய்து அனுட்டானத்திற்கும் வருவார்களாக.

ஆண்டவன் அருள் சுரப்பால் கோவை மகாநாடு யாதொரு விக்கினமின்றி நடை பெறப் பிரார்த்திக்கின்றோம்.

---

## சுயமரியாதையின்றி சுயராஜ்யம் இல்லை.

## நற்காலக் குறி.

இலட்சக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியுள்ள தக்ஷணமாற நாடார்களின் பல பேட்டைகள் பல்லாண்டுகளாகஏற்பட்டு பல்லாயிரம் ரூபாய் வருமான முடைத்தாயிருந்தும் இதுகாறும் மாநாட்டு மதிகுல மக்களுக்கு ஒரு பிரயோசனமுமளிக்கவில்லையே என்று நாம் பலமுறையும் பகர்ந்து வந்துளோம். தென்னாட்டுத் தலைவர்கள் கவனத்திற்கு வரும்படி பன்முறை எழுதியுமிருக்கிறோம். வழுதிகுல வாலிபர்களையும் தட்டியெழுப்பிவிட்டோம். இதனால் ஆங்காங்கு சிறிது விழிப்பேற்பட்டிருப்பதாகக் கண்டோமேயன்றி தகுந்த பலன் கிடைத்திருப்பதாக எண்ணுவதற்கில்லாதிருந்தது. ஆனால் தற்போதுள்ள நிகழ்ச்சியைப் பார்க்க தகுந்த பரிகாரத்தின் உணர்வு தலைவர்களுள்ளத்தில் தொளுந்துவிட்டு வளர்ந்து வந்திருப்பதாக மதிக்க வேண்டியதிருக்கிறது.

இட்டமொழியூரில் தக்ஷணமாறநாடார்கள் கூடித் தீர்மானித்த தீர்மானங்களை நோக்குங்கால் இதை தக்ஷணநாட்டிற்கே நற்காலக்குறி என்று நம்புகின்றோம்.

தென்னாட்டு நாடார்குல மக்கள் நன்மையைக்கருதி ஒருவர் ஏற்படுத்திய கலாசாலை காலமாறுதலால் கஷ்ட நிலைமையிலிருப்பதை அறிந்தும் வாளாவிருந்துவிடாமல் [சே

''உடுக்கை யிழந்தவன் கைபோலவாங்
இடுக்கண்களை வதாம் நட்பு"

என்று ஆன்றோர்கூறுவதற்கேற்ப தென்னாட்டு நாடார்குலத் தலைவர்கள் சமயோசிதமாக ஸ்ரீமான் ஏ. வி. யோசேப்புநாடார் கலாசாலையை மேற்கொண்டு நடத்த முன்வந்தது மிகவும் போற்றத்தக்கது. செய்திருக்குந் தீர்மானங்களும் மக்கள் மனதைக் கவரத்தக்கன. தக்கது செய்ய முன்வந்த தலைவர்களும் சாமான்யமானவர்களல்ல. இவர்கள் ஒன்றுகூடிச் செய்த தீர்மானங்கள் உறுதியாய் என்றும் நிலைநிற்கச் செய்வார்களாக.

தக்ஷணநாடார் குல மக்களுக்கு இன்னும் எத்தனையோ கலாசாலைகள் தேவையாயிருக்கலாம். தேவை யாவுக்கும் தக்ஷணமாறநாடார் பேட்டை இடங்கொடுக்கலாம். அவ்வருமானங்களையெல்லாம் கல்விக்கே செலவு செய்வதென்று சிறந்த தலைவர்கள் மனம் சற்றே திரும்பிவிட்டால் தக்ஷணநாடு இன்னும் சிறப்புடன் விளங்குமன்றோ?

மனவேதனையடைந்து கொண்டிருந்த அந்நாட்டு ஏழை மக்கள் வாட்டந்தீர இட்டமொழிக் கூட்டத்தீர்மானம் ஏதுகரமாயிருக்குமென்று நம்புகிறோம். கிறிஸ்தவ மிஷனெரிகளையே இனி நம்பியிருப்பதில் அதிகப் பிரயோசனமில்லை. முன்போல் கல்விக் குதவிசெய்வதாகத் தெரியவில்லை. ஆகையால் ஏழைமக்களுக்கு பெரிதும் உதவி செய்ய முன்வந்த தலைவர்கள் இன்னும் இடைவிடாமல் முயற்சி செய்து பேட்டைவருமானங்களை ஒழுங்கு செய்து இட்டமொழி ஸ்கூலுக்கு உதவிசெய்து வருவதுடன் நின்றுவிடாமல் இன்னும் எத்தனை பாடசாலைகளுககு வருமானம் போதக்கூடுமென்பதை ஆராய்ந்து எவ்விடங்களில் ஆரம்பப்பாடசாலைகள் தேவையோ ஆங்கெல்லாம் அவைகளை நிர்மாணிக்கும்படி வேண்டுகின்றோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# குறிப்புகள்.

## ஆங்கிலக்கலா குமரர்கள்.

நமது ஜன சமூகத்தில் ஆங்கிலம் படித்த பட்டதாரிகள் பலர் கிறிஸ்தவ சமயத்திலும் ஹிந்து சமயத்திலும் பேர் பெற்றிலங்கிவருவது கௌரவிக்கத்தக்கதேயாம். ஆனால் ஹிந்து நாடார்களைக்காட்டிலும் கிறிஸ்தவ நாடார் சகோதரர்களே முதன்மையாகவும் அதிகமாகவும் ஆங்கிலக் கல்வியில் படித்துத் தேர்ந்திருக்கிறார்களென்ற பெருமையை நாம் மறக்காமலிருக்க முடியாது. ஹிந்துநாடார்களில் முதன் முதலாக பி. ஏ பட்டமும் எம். ஏ. பட்டமும் பெற்றது முறையே ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீமான் எஸ். எஸ். ஆதித்தநாடாரவர்களும் ஷையார் 2-வது குமாரர் ஸ்ரீமான் எஸ். பாலசுப்பிரமணிய ஆதித்தநாடாரவர்களுமேயாவர். தற்காலத்திய ஆங்கில அரசாங்கத்தில் இவ்வழி பெரிதும் பலன் தருமென முன்னதாகவோர்ந்து நமது ஹிந்து சோதரர்களுக்குவழிகாட்டிகளாய் விளங்கியது போற்றற்குரிய தொன்றும். மற்றும் ஷை ஸ்ரீமான் எஸ். பாலசுப்பிரமணிய ஆதித்தநாடார் எம். ஏ. அவர்கள் இவ்வருடம் ஐ. ஸி. எஸ். பரீக்ஷை படிப்புக்குப் போவதாகவும் சம்மதக்குறித்து விடயிருக்குந் தகவல் கிடைத்திருக்கிறமையான் இவ்வகைப் படிப்பு அத்தியம் வேண்டற்பாலதே யென யாம் வலியுறுத்திக் கூறுவதோடன்றி தயக்கமின்றி பரீக்ஷைக்குச் சென்று வெற்றியுடன் திரும்பக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

## நமது மகாநாடு.

நாடார் மகாஜன 11-வது மகாநாடு கூடும் விஷயமாய் 25-6-27ல் கூடிய கவுன்சில் கூட்டத்தில் ஆலோசனைக்கு வந்ததில் தற்போதிருக்கும் நிலைமையில் தக்க ஜல வசதியும் ஜன சௌகரியமும் போக்குவரத்துக்கு ரயில் வசதியும் ஒருங்கே அமையப்பெற்றதாகிய கும்பகோணத்தில் நடத்துவிப்பதென முடிவுசெய்யப்பட்டு அதற்கென நியமிக்கப்பட்ட கமிட்டியார் ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் எம். எல். ஸி. அவர்களின் தலைமையின் கீழ் ஜூலை மீ 4 வ கும்பகோணம் புறப்படுகிறார்கள். இன்னவர்களை அன்புடன் ஏற்று எவ்விதத்தும் இம்முறை அவ்விடத்தே மகாநாட்டைக் கூட்டி வைக்கத்தக்கபடி கும்பகோணம் வாழ் நங்குலாபிமானிகள் முன்னிற் பார்களென எதிர்பார்க்கின்றோம்.

## பிராமணரல்லாதார் மகாநாடு.

கோயம்புத்தூரில் ஜூலை மாதம் 2, 3 உகளில் கூட விருக்கும் பிராமணரல்லாதார் மாபெருங் கூட்டத்திற்கு அனைத்து ஜில்லாயினரும் தக்க முன்னேற்பாடுடன் சமூக சீர்திருத்த நோக்கங் கொண்டும், அரசியல் நோக்கங் கொண்டும் தக்க தலைவர்களைத் தேடியும், சுயமரியாதையை நாடியும் விரைந்தோடி முன்னிடந் தேடுவோராயிருக்கின்றனர். இவ்வேளை நம் குலத்தினர்களும் தென்னாட்டு சமூக சீர்திருத்தம் கருதி இம் மகாநாட்டில் அகத்தியம் கலந்து கொள்வது பெரிதுமுபயோகமானவையின் நமது குலத் தலைவர்கள், சங்க உத்தியோகஸ்தர்கள் உள்பட கோயம்புத்தூர் பிரயாணமாவதாக அறிகிறோம். மற்றும் குலாபிமானிகளும் இம்மகாநாட்டிற்கு விஜயஞ் செய்வது நன்மையுடைத்தாகுமெனக் கூறுகிறோம்.

## லாட்டரி அறிக்கை.

நமது "மித்திரன்" க்ஷேம நிதித் தர்மப்பண்டுலாட்டரிச்சீட்டுப் பிரைஸ் ஜாபிதா பூராவும் வேலை முடிந்து சீட்டு விற்பனை செய்த கனவான்களுக்கும், ஸ்டாம்பு அனுப்பிய கனவான்களுக்கும் 25—6—27 முதல் ஜாபிதா அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ஏனையோர் வேண்டுமேல் 2 அணா ஸ்டாம்பு பத்திராதிபர், "நாடார்குல மித்திரன்" அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

# நாடார் மகாஜன சங்கம், மதுரை.

## கவுன்ஸில் நடவடிக்கைகள்.

1927-ம் ௵ ஜூன் ௴ 25-ம் தேதி சனிக்கிழமை மாலை 6½ மணிக்குச் சங்கம் ஹாலில் சங்கம் வைஸ்பிரசிடெண்டு ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் எம். எல். ஸி. அவர்கள் தலைமையின் கீழ் கவுன்ஸில் மீட்டிங் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

1. ஏழைமாணவர்கள் ஸ்காலர்ஷிப் பண்டின் வருமானத்திலிருந்து ஸ்கூல் கிராண்ட்டும் ஸ்காலர்ஷிப்பும் இவ்வருஷம் கொடுக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

2. பள்ளிக்கூட கிராண்ட் கொடுப்பதற்காக ரூ 750-ம் ஏழைமாணவர்கள் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்காக ரூ 750-ம் சாங்க்ஷன் செய்யப்பட்டது.

3. ஸ்காலர்ஷிப் விண்ணப்பங்களையும் ஸ்கூல் கிராண்ட் விண்ணப்பங்களையும் பரிசோதனை செய்து 2 வாரங்களுக்குள் முடிவு செய்வதற்கு எழுவரடங்கிய கீழ்க்கண்ட கனவான்களை கமிட்டியாக நியமிக்கலாயிற்று.
ஸ்ரீமான்கள் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் எம். எல். ஸி. பட்டிவீரன்பட்டி கன்வீனர், ஆ. அ. ஆறுமுகநாடார் மதுரை, ப. வ. சோமசுந்தரநாடார் மதுரை, அரி. அ. செ. கந்தசாமிநாடார் தூத்துக்குடி, ப. ரா. முத்துச்சாமிநாடார் மதுரை, சு. ஆ. முத்துநாடார் அருப்புக்கோட்டை, ஜாஷ்வா இரத்தினராஜ் டானியேல்நாடார் பீ. ஏ. பீ. எல். நாகர்கோவில்.

4. 11-வது மகாநாட்டை கும்பகோணத்தில் இவ்வருஷம் ஆகஸ்டு மாதத்தில் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்துவைக்க ஐவரடங்கிய கீழ்க்கண்ட கனவான்களை ஓர் கமிட்டியாக நியமிக்கலாயிற்று.

ஸ்ரீமான்கள் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் எம். எல். ஸி. பட்டிவீரன்பட்டி, பா. ம. பாண்டியநாடார் மதுரை, ஆ. அ. ஆறுமுகநாடார் மதுரை, ப. வ. சோமசுந்தரநாடார் மதுரை, சு. ஆ. முத்துநாடார் அருப்புக்கோட்டை.

5. சொத்து வாங்கும் விஷயமாய் ஏற்பட்ட கமிட்டியார்கள் ஒரு ரிப்போர்ட் தயாரித்து அனுப்பவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

ஊ. பு அ. சௌந்தரபாண்டியநாடார்,
வைஸ்பிரசிடெண்ட்.

## தீண்டாமை விலக்குத் திருவுளச்சீட்டு.

அருப்புக்கோட்டைச் சொக்கலிங்கபுரத்தில் வக்கீல் அனந்த நாராயண சாஸ்திரிகள் வீட்டுக்கு நான் ஒரு காரியத்தின் நிமித்தமாகப் போயிருந்தேன். அப்பொழுது அவர் வைக்கத்தில் நடந்த சத்தியாக்கிரக விஷயத்தைப் பற்றி ரொம்பவும் தவறு என்றும் அது கூடாது என்றும் சொன்னார். அதற்கு யான் காந்தியடிகளின் கொள்கை உண்மையான கொள்கை என்றும் தீண்டாமை நீங்கவேண்டும் என்றும் சமத்துவம் ஏற்பட்டால் தேசம் முன்னேற்றம் அடையும் என்றும் சொன்னேன். அதற்கு அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் மிகுதியும் தெய்வபக்தி உடையவர். அதனால் திருவுளச் சீட்டுப்போட வேண்டுமென்று கேட்டார். அப்படிச் சீட்டுப்போடுவோம்; அதில் உண்மை விளங்கும் என்றவாக்கத்தைக்கொண்டு நான் போடச்சொன்னேன். அப்படியே திருவுளச்சீட்டு இரண்டு, சந்தேகமும் சந்தோஷமும் என்று எழுதி அவர் பகவானைப் பிரார்த்தனைசெய்து போட்டார். அப்படிப் போட்டதில் "வைக்கம் மஹாதேவருக்கு மகாத்மா காந்தி நடந்துகொண்டது சந்தோஷம்" என்று சீட்டு எடுத்ததில் வந்தது. அவர் அதை சரி என்று ஒப்புக்கொண்டார். ஆகையால் நாம் எல்லோரும் சமத்துவத்தை நாடிக் கொள்வோமாக என்று நமது நேயர்களில் ஒருவரான அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் ஸ்ரீமான் வீர. சு. வீரய்யாசெட்டியார் நவசக்தியில் எழுதுகிறார்.

# அரியவுரைகள்.

உன் கணவர் தனது தாயிடம் கொள்ளும் பிரியத்தைக்கண்டு பொறாமையடையாதே.

—டோராதிடிக்ஸ்.

முற்றுமறிந்தவ ரொருவருமில்லை; ஏதுமறியாதவ ரொருவருமில்லை. ஆகவே ஒருக்கால் உனது மாமிஅறியாத விஷயங்களில்யோசனை கூறலாம். அதைக்கண்டு கோபங்கொள்ளலாகா. ஏனெனிலோ குழந்தைகளைச் சிறப்பு வாய்ந்த புருஷர்களாகவும் ஸ்திரீகளாகவும் அவள் செய்தனுபவம் பெற்றிருக்கிறாள்.

—ஷையார்.

உனது மாமியுடன் ஈட்டுக்கொள்ளப் போகிறாய் என்று தீர்மானங்கொள்; அவளது வார்த்தையையல்ல அவளது உள்ளத்தை வென்றுவிடு. உன்னைத் தயார் செய். அவளைக்காணுவதும் சொல்லைக்கேட்பதும் விரோதமெனக் கருதாதே.

—ஷையார்.

உன் மாமியையும் உன் தாயையும் ஒருவராகக்கருது. பின் உன் மாமியை நெருங்க ஏன் கூசுகிறாய்? உன் தாயிடம் ஏன் அத்தியந்தரகசியம் கொள்கிறாய்? இனி அவ்விதமின்றி ஒரு அந்நிய ஸ்திரீபோல மதித்திருப்பதாக உன் மாமி உணர்ச்சி கொள்ளும்படி நீ நடவாதே. அவள் உன்னைப் பார்க்க வந்தால் கடமைக்காகவே சகித்துக் கொள்ளப்படும் ஒரு விருந்தாளி போல நடத்தப்படுவதாக அவள் கருதும்படிக்கு நடவாதே.

—ஷையார்.

உன் மருமகள் உன்னை எப்படி நடத்த வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அப்படியே உன் மாமியையும் நீ நடத்து.

—ஷையார்.

பொதுஸ்தாபனம் எதிலும் பெரும்பான்மையோரின் அபிப்பிராயப்படியே காரியம் நடைபெற வேண்டும். ஆனால் சிறுபான்மையோர் ஒரு விஷயத்தில் பலமான விரோதங்கொண்டிருந்தால் அதைப்பெரும்பான்மையோர் வலியுறுத்துவது பலாத்காரமாகும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் பெரும்பான்மையோர் விட்டுக் கொடுத்து விடுவது நலம்.

—மகாத்மாகாந்தி.

கீழ் நாட்டார் கிறிஸ்துமதத்தின் கொள்கைகளைத் தெரிந்து கொண்டு விட்டனர். இப்போது அம்மதத்தை மேனாட்டார் எவ்வளவு தூரம் அனுஷ்டித்து வருகிறார்கள் என்று தெரிந்து கொள்ளவிரும்புகிறார்கள்.

—ரேவரேண்டகேல்கி.

இந்தியா தனது பண்டைக்கால நாகரீகத்தை இழந்து மேனாட்டு நாகரீகத்தைத் தழுவுமென்று நினைப்பது முற்றுந்தவறு.

—ஷையார்.

## இரு கொலைகள்.

விருதுநகரில் 19—6—27-ல் தலையில்லா முண்டமொன்று அருப்புக்கோட்டைக்கு போகும் ரோட்டிற் கண்மையில் கிடந்ததைக் கண்ட ஜனங்கள் நெருங்கி அங்க அடையாளங்களைப் பரிசோதித்ததில் அந்நகர் காப்பி கிளப் கூடலிங்க நாடாரெனத் தெரியவந்தது. இது சம்பந்தமாய் ஒருவன் கைது செய்யப்பட்டிருப்பதுடன் போலீஸ் புலன் விசாரித்து வருகிறார்கள்.

அருப்புக்கோட்டையில் சிவக்குளம் கண்மாய் ஓடையில் பள்ளர் வகுப்பைச் சேர்ந்த காடுகாவற் காரனொருவன் இரண்டு மூன்று நாளைக்கு முன்னதாகவே வெட்டுண்டு 25—6—27-ல் தான் சவம் தென்பட்டது. இதுவரை ஒருவரும் பார்க்காததால் சவம் நொந்து அழுகிவிட்டது. வெட்டுண்ட காரணம் தெரியவில்லை. போலீஸ் இது விஷயமாய்க் கவலை எடுத்து வருகிறார்கள்.

# தக்ஷணமாற நாடார்களின் கூட்டம்.

இட்டமொழி ஹைஸ்கூல் மானேஜர், ஸ்ரீமான் எஸ். துரைசாமி நாடார் பி. ஏ. யல். டி., எழுதுகிறார்:—

1927-ம் வருஷம் ஜூன் மாதம் பத்தொன்பதாம் தேதி தக்ஷணமாற நாடார்களின் கூட்டமொன்று, நாங்குநேரி தாலுகா, இட்டமொழிகிராமத்தில் ஸ்ரீமான் ஏ. வி. யோசேப்பு நாடார்ஹைஸ்கூல் காம்பவுண்டில் அமைக்கப்பெற்றிருந்த அழகிய பந்தலில் ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீமான் வக்கீல் எஸ். எஸ். ஆதித்த நாடாரவர்கள் அக்கிராசனம் வகிக்க, அக்கூட்டம் நடைபெறலாயிற்று. அக்கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த முக்கியமான கனவான்கள் ஏ. தாமஸ்நாடாரவர்கள் பி. ஏ. பி. யல், யம். யல். ஸி. பாளையங்கோட்டை, டி. இராஜேந்திரம் நாடாரவர்கள் பி. ஏ. பி, எல். பாளையங்கோட்டை, எஸ் தங்கசாமி நாடாரவர்கள் பி. ஏ. பி. யல். பாளையங்கோட்டை, ரிவிங்டன் தேவதாஸ் நாடாரவர்கள் பி. ஏ. பி. எல். பாளையங்கோட்டை, ஜே. வி. தாமஸ் நாடாரவர்கள் வக்கீல் ஸ்ரீவைகுண்டம், பெருமாள் நாடாரவர்கள் வக்கீல் ஸ்ரீவைகுண்டம், பி. யன். எஸ். கோவிந்தபிள்ளை நாடாரவர்கள் ஹானரெரி மாஜிஸ்டிரேட் கோவில்பட்டி, வேதசாருவேல் (வெள்ளையா) நாடாரவர்கள் ஆனைக்குடி, ஜி. ஏ. ஆபிரகாம் நாடாரவர்கள் இடைச்சிவிளை, ப. க. அனந்தபெருமாள் நாடாரவர்கள் வியாபாரம், கோவில்பட்டி, ஜி. எஸ். சாமுவேல் நாடாரவர்கள், மரக்கடை பாளையங்கோட்டை, எஸ். வின்சென்ட் பரமானந்தம் நாடாரவர்கள் முனிசிபல் கவுன்சிலர் விருதுநகர் ஆகிய பலரும்வந்து அக் கூட்டத்தைச் சிறப்பித்து நடத்தினர்.

இக் கூட்டம் நடந்த நோக்கம் யாதெனின் இட்டமொழி ஏ. வி. யோசேப்புநாடார் ஹைஸ்கூலை தக்ஷணமாறநாடார்களின் பேட்டைகளின் மானேஜ்மென்டில் வைத்து நடத்தப் போவதைக் குறித்ததேயாகும்.

அந்நோக்கத்தை அனுசரித்துப் பின்வரும் தீர்மானங்கள் தீர்மானமாயின.

1. இட்டமொழி ஏ. வி. யோசேப்பு ஹைஸ்கூலை தக்ஷணமாற நாடார்களின் பேட்டைகளின் மானேஜ்மெண்டில் வைத்து நடத்த வேண்டுமென்றும், அப்படி நடத்துவதற்குச் சாதனமாயிருக்கும் பொருட்டு, ஷை பேட்டைகளின் மானேஜ்மெண்டிற்கும் விதிகள் ஏற்படுத்தி, ஷை பேட்டைகளையும் சொஸைட்டியாக ரிஜிஸ்தர் செய்ய வேண்டும்.

2. விதிகள் ஏற்படுத்த வேண்டிய விஷயத்தையும் ரிஜிஸ்தர்செய்ய வேண்டிய விஷயத்தையும் அவசரமாக நடத்திக் கொடுக்கும்படி மகா-ா-ா-ஸ்ரீ எஸ். எஸ். ஆதித்தநாடாரவர்களையும் ஏ. ஸி. பால் நாடாரவர்களையும் கேட்டுக்கொள்ளலாயிற்று.

3. இப்போது மதுரைப் பேட்டையிலிருந்து ஷை ஹைஸ்கூலுக்குக் கொடுக்கும்படி சாங்க்ஷன் செய்து மகா-ா-ா-ஸ்ரீ வின்சென்ட் பரமானந்தம் நாடாரவர்கள் மூலமாய் அனுப்பியிருக்கிற ரூ 1000த்தையும் ஸ்கூல் மானேஜரிடம் கொடுத்துவிடும்படி தீர்மானிக்கலாயிற்று.

4. பேட்டைகள் சம்பந்தமான சொஸைட்டி ரிஜிஸ்தர் செய்தானவுடன் ஷை ஹைஸ்கூல் மானேஜ்மெண்டை ஷை சொஸைட்டியிலிருந்து ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

இத்தீர்மானங்கள் யாவும் ஏகோபித்து ஏகசம்மதத்தோடு செய்யப்பெற்று ஏகமனதோடு அங்கீகரிக்கப் பெற்றன. கடைசியில் ஸ்ரீ தாமஸ் நாடாரவர்கள் ஜனங்களுக்கு வேண்டிய இப்பாகத்து ஜல சௌக்கியத்தின் பொருட்டு அவர்தாம் செய்துவரும் முயற்சித் திறத்தைப்பற்றியும் இப்பாகத்து தக்ஷணமாறநாடார்கள் அவ்வகையில் முயலவேண்டிய விதங்களையும் விஸ்தரித்துக் கூறுமோர் சொற்பொழிவை நிகழ்த்தினர். பிறகு மகா-ா-ா-ஸ்ரீ இராஜேந்திரம் நாடாரவர்களும் மகா-ா-ா ஸ்ரீ ஆதித்தநாடாரவர்களும் முடிவுரைகள் கூற, கூட்டம் முடியலாயிற்று.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# இராமநாத புரத்தில்

## திரு. சத்தியமூர்த்தி.

(நேரில் பார்த்தவர் எழுதுகிறார்)

இராமநாதபுரம் ராஜாவின் அரண்மனைக்குப் பக்கத்திலுள்ள சுற்றுமதிலுள்ள வெளியில் ராஜாவின் சகோதரர் திரு. பாண்டியன் அவர்கள் தலைமையின் கீழ் திரு. சத்தியமூர்த்தி "காங்கிரஸ்" என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். கதர் வாடையே தெரியாத பல பிராமண வக்கில்களும் வந்து மேடையிலிருந்தனர். சுமார் ஆயிரம் ஜனங்கள்வரை கூடியிருந்தனர். தலைவர் திரு. சத்தியமூர்த்தியை பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, காரியக் கமிட்டி இவைகளைப் பற்றி விரிவாய்ப் பேசும்படி கேட்டுக் கொண்டார். திரு. சத்தியமூர்த்தி எழுந்து தலைவர் எதிர் பார்த்த விஷயங்களைப்பற்றி தாம் விரிவாய்ப் பேசப்போவதில்லையென்றும், அது விஷயமாய்ப் பத்திரிகைகளை வாசிப்போர் அறிந்து கொண்டிருக்கலாமென்றும் ஆகையால் தாம் வேறு விஷயங்களைப்பற்றி எடுத்துக் கூற வேண்டிய அவசியமிருப்பதாகவும் கூறி அவர் பேசியதின் சுருக்கமாவது:—

முக்கியமாய் தேச மகாசபையைப் பற்றி இப்போது பலரும் கவனித்து வருவதில், அதிலுள்ள குற்றங்களைப் பலர் வேண்டுமென்றே மிகைப்படுத்திக் கூறி வருகிறார்கள். அவ்விதம் காங்கிரஸ் ஒன்றும் தவறிழைக்கவில்லை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைத் தீர்மானங்கொண்டு வந்து நிறைவேற்றப் பெற்றது பெரிய வெற்றியாகும். கவர்ன்மெண்டார் ஹிந்துக்களையும், முஸ்லீம்களையும் பிரித்து வைத்து தனித்தேர்தல் தொகுதிகளை யேற்படுத்தி அதன் மூலம் ஹிந்துக்களுக்கு முகமதியர் உதவி செய்ய முடியாமலும், முகம்மதியர்களுக்கு ஹிந்துக்கள் உதவி செய்ய முடியாமலுஞ் செய்து வந்ததை நானும் திரு. ஸ்ரீநிவாசய்யங்காருள்பட்ட சில தலைவர்களும் 8 வருஷமாய் விடாமுயற்சியுடன் வேலை செய்து இவ்வித முடிவுக்குக் கொண்டுவந்து விட்டோம். தென்னிந்தியாவில் ஹிந்து முஸ்லீம்கள் வேற்றுமையின்றி வாழ்ந்து வருவது நமக்குத் தெரியும். வட இந்தியாவிலுங்கூட ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகிறார்கள். சில சமயங்களில் பசுக் கொலை விஷயமாயும், மசூதி முன் மேளம் வாசித்தல் விஷயமாகவும் சில சச்சரவுகள் நடந்ததுண்டு. இவைகளைப்பற்றி பத்திரிகைகள் மிகப்படுத்தி எழுதிவருகின்றன. அதை நம்ப வேண்டாம். இன்னும் ஐந்து வருஷங்களில் எல்லோரும் ஐக்கியமாகி விடுவார்கள். தென்னிந்தியாவில இந்த சமஸ்தானத்திலும், மற்ற விடங்களிலும் 100-க்கு 6 பேர்களே முகம்மதியர்களிருக்கிறார்கள். அவர்களை நன்றாய்நடத்தி வருவதிலிருந்தே வட இந்தியாவிலும் நம்மைப் பார்த்து நடக்க வழி யேற்படும். தென்னிந்தியா வழிகாட்டுவதில் பின் தங்காதென்று நம்புகின்றேன். இரண்டாவது தென்னிந்தியாவில் பிராமணர், பிராமணரல்லாதார் வேற்றுமையைச் சிலர் வளர்த்து வருகிறார்கள். நூற்றுக்கு மூன்று பேர் பிராமணர் தவிர 97 பேருள்ள பிராமணரல்லாதாருக்குள்ளே எத்தனையோ ஜாதிப் பிரிவுகளிருக்கின்றன. இவர்களில் ஒருவருக்கொருவர் சம பந்தி போஜனங் கிடையாது. இப்படியிருக்க பிராமணர்களை மாத்திரம் குறை சொல்லுவானேன்? 3 பிராமணர்கள் 97 பிராமணரல்லாதாரை எதுவுஞ் செய்துவிட முடியாது. இதற்காக பிராமணரல்லாதார் பயப்படக் காரணமில்லை. தேச மகாசபையாகிய காங்கிரஸை அழித்துவிட வேண்டுமென்று வேலை செய்யும் மாதுர் துரோகிகளே இவ்வித வேற்றுமையை வளர்த்து வருகிறார்கள். பட்டம் பதவிகளில் ஆசையுள்ள சில சுயநலவாதிகள் தேசத்தை அரசாங்கம் வகிப்போர்களிடத்தில் ஒரு காசுக்கு விற்று மாதுருதுரோகஞ் செய்து வருகிறார்கள். ஆறு வருஷமாய் அதிகாரவர்க்கத்திற்கு ஊழியஞ் செய்த ஜஸ்டிஸ் கட்சியாரே இதில் முக்கியஸ்தர்கள். காங்கிரஸிலிருந்து ஊழியஞ் செய்து சிறை சென்றவர்களாகிய திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரும், திரு. வரதராஜுலு நாயுடுவும் நேர் முகமாய் காங்கிரஸ் மகாசபையைத் தாக்கி வருகிறார்கள். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் மறை முகமாய்த் தாக்குகிறார். திரு. பிரகாசம், சாம்பமூர்த்தி முதலியவர்களும் இவ்வகையானவர்களே. இவர்கள் வார்த்தைகளை மகாஜனங்கள் நம்பக் கூடாது. இவ்வூரில் காங்கிரஸ் கொடியையே காணமுடியாதென்று நமக்குச் சொல்லப்பட்டது. இப்போது காங்கிரஸ் கொடி நாட்டியாயிற்றென்பதைப் பார்க்கிறேன். காங்கிரஸ்காரர்களை நம்ப வேண்டும். ஒரே தலைவரைப் பின்பற்றி நடக்க வேண்டும். பிராமணரல்லாதாருக்காக விட்டுக் கொடுப்பதில் எமக்குச் சம்மதந்தான். பிராமணரல்லாதாரே எல்லா உத்தியோகங்களையும் கைப்பற்றிக் கொள்வதில் எனக்கு ஆக்ஷேபனையே கிடையாது. சுயராஜ்யத்துக்கு விரோதிகளாயுள்ளோர் சொல்வதை நம்ப வேண்டாம்; என்னை நம்புங்கள். தற்காலத்தில் முன்னிற்கும் பிரசினைகள் 4: 1. இரட்டையாட்சியை நடத்திவைக்க முடியுமா? 2. மந்திரி பதவியை யேற்றுக்கொள்ள வேண்டுமா? 3. எந்த மந்திரி சபையும் நிலை பெறுமல் செய்வதா? 4. வரப்போகும் இராயல் கமிஷன் முன் சாட்சியஞ் சொல்ல வேண்டாமா? முதலாவது கேள்விக்கு மிதவாதிகளான டாக்டர் பராஞ்ச்பே, டாக்டர் மூஞ்சே, திரு. கெல்கார் முதலியவர்கள் இரட்டை யாட்சியை நடத்தி வைக்க முடியாதென்று முட்டிமன் கமிட்டி முன் சாட்சியஞ் சொல்லி விட்டார்கள். மந்திரிகளாக இருந்து அநுபவித்தவர்களே சொல்லிய பிறகு மற்றவர்கள் சொல்ல வேண்டியதில்லை. இரண்டாவது சென்னையைப் பொறுத்தமட்டில் நான் நன்றாய் யோசனை செய்த பிறகு மந்திரி பதவியை யேற்றுக் கொள்ளக் கூடாதென்று நான் முடிவுக்கு வந்திருக்கிறேன். எனது நண்பர் திரு. ஜார்ஜ் ஜோஸப் மந்திரி பதவியை யேற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திவருகிறார். தேச மகாசனங்களிடத்தில் உத்தியோகம் ஏற்றுக் கொள்வதில்லையென்று வாக்குக் கொடுத்திருப்பதால் நாங்கள் மீறி நடக்க முடியாது. தேச மக்களே யேற்றுக் கொள்ளும்படி சொன்னாலும் சுயராஜ்யக் கட்சியார் 43 பேர் மாத்திரமிருப்பதால் பதவி யேற்றாலும் ஒன்றுஞ் செய்ய முடியாதென்பதே என் அபிப்பிராயம். ஒருக்கால் மறு எலெக்ஷன் நடக்கும்படி செய்து சுயராஜ்யக் கட்சியார் 65 அல்லது 66 பேர் வரும்படி செய்து விட்டால் பிற்பாடு நாங்கள் அதைப் பற்றி ஆலோசனை செய்கிறோம். சுமார் 14 வருஷங்களுக்குப் பிறகு சென்னையில் மார்கழி மாதத்தில் காங்கிரஸ் மகாசபை கூடப்போகிறது. மகாஜனங்கள் அதிகமாய் மெம்பராய்ச் சேர்ந்து மந்திரி பதவி யேற்பதைப்பற்றிய தீர்மானங்கொண்டுவந்தாலும் யோசிக்கலாம். காங்கிரஸின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நாம் நடக்க வேண்டும். காங்கிரஸ் மகாசபைதான் ஏழை மக்கள் வயிறு நிறையச் சாப்பிடுவதற்காக 40 வருஷமாய்ப் பாடுபட்டு வந்திருக்கிறது. காங்கிரஸ் இல்லாவிட்டால் தேசம் இதற்குள் குட்டிச்சுவராய்ப் போயிருக்கும். ஆகையால், இப்போதுள்ள நிலைமையில் மந்திரி பதவியை ஏற்கக் கூடாதென்றே சொல்லுகிறேன். மூன்றுவது மந்திரி சபையை உடைத்தெறிய வேண்டுமென்ற கௌஹாத்தி காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோதமாய் சென்னை சுயராஜ்யக் கட்சியார் நடந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவ்விதம் ஒன்றும் நடந்துவிடவில்லை. கௌஹாத்தி காங்கிரஸ் தீர்மானம் நன்மையான காரியத்தில் ஒத்துழையாதிருக்கச் சொல்லவில்லை. தீங்கான காரியத்தில் ஒத்துழையாதிருக்கக் கட்டளை யிட்டிருக்கிறது. தற்போதுள்ள சென்னை மந்திரிகள் மிகவும் நல்லவர்கள். 6 வருஷம் மந்திரி பதவி வகித்த பனகால் முதலிய மந்திரிகளின் தலைவர் காலஞ்சென்ற தியாகராஜ செட்டியார் ராஜீயக் குற்றத்துக்குத் தண்டனை யடைந்தவர்களை கொள்ளைக்காரர்களைப் போல் நடத்த வேண்டுமென்று சொன்னார். பனகால் பாரதியின் கீதம் பள்ளிக்கூடங்களில் சொல்லி வைக்கக் கூடாது; நூல் நூற்பதைச் சொல்லி வைக்கக் கூடாது; ஹெல்த் ஆபீஸர் மது விலக்குப் பிரசாரமாவது, மதுவின் தீமையைப் பற்றியாவது பேசக் கூடாது என்று உத்தரவு செய்த தோடல்லாமல் சென்னைக் கார்ப்பொரேஷன் 500 ரூபாய் செலவில் மஹாத்மா காந்தியின் படத்தைத் தொங்கவிடக் கூடாதென்றும் உத்தரவு செய்து இப்போது தோல்வியடைந்த பிற்பாடு மாயவரத்தில் மஹாத்மா படத்தைத் திறந்து வைத்து சூரியனைப் பார்த்து வேதோ குலைத்த மாதிரி பேசினர். 6 வருஷம் உத்தியோகம் வகித்து ஸ்தல ஸ்தாபனங்களை அவர்கள் ஆட்டிவைத்த காலத்தில் நாமினேஷன் விஷயங்களில் நடந்து கொண்டதை இந்நகர் வாசிகள் அறிவார்கள். இப்போதுள்ள மந்திரிகளில் சுப்பராயன் ஸ்தல ஸ்தாபனங்களில் நாமினேஷன் கூடாதென்று சொல்லியிருக்கிறார். ஆரோக்கியசாமி முதலியார் படிப்படியாக மது விலக்குச் செய்துவர வேண்டியதிருப்பதால் அப்படியே செய்து வருவதாக வாக்களித்திருக்கிறார். ரெங்கநாத முதலியாரோ நமக்கெல்லாம் அதிக சிரத்தையுடைய ஹிந்து தேவஸ்தான சட்டத்தில் கவர்ன்மெண்டார் தலையிடாதிருக்கும்படி திருத்த மசோதா கொண்டுவருவதாக வாக்களித்திருக்கிறார். இவைகளெல்லாம் எவ்வளவு முக்கியமானவைகளென்று யோசித்துப் பாருங்கள். இந்த மந்திரி சபையை உடைத்து விட்டால் பழையபடியும் தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் பனகால் மந்திரி சபை வந்து விடும். அதற்காக பனகால் கவர்னரின் அந்தரங்கக் காரியதரிசியின் மாளிகையைச் சுற்றித்திரிவதை நான் அறிவேன். நீங்கள் என்னை நம்புங்கள். எந்த மந்திரி சபையையும் உடைத்தெறியும்படி சொல்லப்படுகிறது. அது நடக்கக்கூடியதல்ல. மிகவும் சொற்பப் பேருள்ள இப்போதுள்ள மந்திரி சபையை கவர்னர் அமைத்துவிட வில்லையா? கவர்னர் எங்கள் கட்சித் தலைவரைக் கூப்பிட்டு மந்திரி சபையை அமைக்கும்படி கேட்ட போது நாங்கள் வேண்டாமென்று சொல்லிவிட்டோம். மந்திரிகளுக்கு மாதம் 5000 ரூபாய் சம்பளமும், காரியதரிசிக்கு 500 ரூபாய் சம்பளமுங் கிடைக்கும். இவ்வளவு பெரிய சம்பளத்தை துச்சமென ஒதுக்கிவிட்ட சத்தியமூர்த்தியும் பதவிக்காகச் சுற்றித்திரியும் பனகாலையும் சமமாய்ச் சொல்லும்போது தான் ஆத்திரமுண்டாகிறது. இப்போதுள்ள மந்திரி சபையை எப்போது வேணுமானாலும் உடைத்துவிட எங்களால் முடியும். சமயம் நேரும்போது அவ்விதஞ் செய்யவும் பின்வாங்க மாட்டோம்.

நாம் சுயராஜ்யம் வாங்குவதற்காக அரசாங்கத்தாரைக் கெஞ்சுவதால் முடியாது. சட்ட மறுப்பும், வரி கொடா இயக்கமும் தான் நாராயணாஸ்திரம். அந்த அஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்ய நமக்குள் ஒற்றுமை வேண்டும். நாம் பிரயோகஞ் செய்து விடுவோமென்று தெரிந்தாலும், இங்கிலீஷ்காரர்கள் நமக்கு சுயராஜ்யங் கொடுத்துவிடுவார்கள். அதவர் செய்யும்படி வந்தாலும் நமது ஸ்தாவர சங்கம சொத்துக்களை ஜப்தி செய்து ஏலத்துக்கு விடுவார்கள். நாம் ஒற்றுமையோடிருந்து ஒருவரும் ஏலத்தில் கேட்காவிட்டால் இங்கிலாந்திலிருந்து பண்ணுக்கொண்டு வந்து வாங்க மாட்டார்கள். ஒன்றிரண்டு பேர் ஜெயிலுக்குப் போகும்படி நேர்ந்தாலும் நேரலாம். இதற்கெல்லாம் நாம் அஞ்சக்கூடாது. ஒற்றுமையோடிருந்தால் சுயராஜ்யம் நம்மிடம் வந்து சேரும். நமக்குள் ஒற்றுமையையுண்டாக்க வேண்டுமானால் நமது ஜனங்கள் மத பக்தியுள்ளவர்களாதலால், ஒற்றுமைக்கு விரோதமாய் நடப்பவர்கள் ஏழேழு தலைமுறையும் நரகத்தில் கிடந்துழல வேண்டி நேரிடுமென்று சொல்ல வேண்டும். அப்போது எல்லோரும் ஒற்றுமையாயிருப்பார்களென்பதில் சந்தேகமேயில்லை என்றும் இன்னும் பலவும் பேசி முடித்தார். ராயல் கமிஷன் முன் சாட்சியஞ் சொல்ல வேண்டுமா என்பதைப்பற்றி பதில் சொல்லாத காரணந் தெரியவில்லை. ஜஸ்டிஸ் கட்சி அபி[illegible]கள் பாண்டி மகாராஜா அல்[illegible]ட்டால் பல கேள்விகள் கேட்[illegible]மே என்று பேசிக் கொண்டு செ[illegible]ர்கள்.

## ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல்நாடார் வாசகசாலை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் ஆதரவில் 19-6-27-ல் இரவு 7-மணிக்கு லைபரேரிஹாலில் கூட்டம் ஒன்று ஸ்ரீமான் என். எஸ். நெல்லையப்பநாடார் அவர்கள் அவைத்தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் ஸ்ரீமான் சு. உ. வெற்றிவேல்நாடார் அவர்கள் 'உலகப்போக்கு' என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அன்னார் பிரசங்கத்தில் உலகத்தில் ஒவ்வொரு தேசமும் கல்வி நாகரீகம் கைத்தொழில் முதலியவைகளில் அதிசயிக்கத்தக்க விதமாய் புதிது புதிதான காரியங்களைச் செய்துவரும் போது பரதகண்டமாகிய நம்மிந்தியாவில் ஜாதிவேற்றுமை மதவேற்றுமைகளைப் பலப்படுத்திக்கொண்டும், வர்ணாச்சிரமதர்மம், தீண்டாமை, பாராக்காமை முதலிய பெயர்களால் சமத்துவம், சகோதரத்துவம் என்பவைகளை அறவே மறந்துவிட்டார்களென்றும் நம தேசத்தை மதத்தில் அடிமைப் படுத்திய பிராமணீயத்தை அறவே யொழித்து மக்களுக்குள் சுதந்திரத்தையூட்ட பத்திரிகைகள் மூலமாயும் பிரசங்கவாயிலாயும் வைக்கம் வீரர், திரு. ஈ. வெ. ராமசாமிநாயக்கர், திரு. சங்கரகண்ணப்பர், திரு. ஜே. என். இராமநாதன் திரு. ஆரியா இவர்கள் அரும்பெரும் பிரயாசை எடுத்து வருகிறார்களென்றும் மதத்துரோகிகளென்றும் சொல்லித்திரியும் உண்மையற்ற போலிதேசாபிமானிகளின் வார்த்தைகளே உலகப்போக்காக இருந்துவருகிறது. மேலும் நம் இந்திய மக்கள் ஒருவர்க்கொருவர் சமத்துவம் சகோதரத்துவம் பாராட்டாமல் சுயராஜ்யம் என்று பிதற்றித்திரிவது அரசாங்கத்தாரை ஏமாற்றி உத்தியோகங்களையும் உயர்ந்த சம்பளங்களையும் பெறுவதற்காக முயற்சித்து வரும் ஓர் சிறு வகுப்பாரின் சாக்குப்போக்குதானென்றும் அதில் நம்மவர்கள் சித்தம்போக்கு சிவன் போக்கு என்று மயங்கிவிடக் கூடாதென்றும் இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் சொல்லிமுடித்தார்கள். பின்னர் அநுசரணையாக ஸ்ரீமான் மு. செல்வபதிநாடார் அவர்கள் பேசுகையில் ஹிந்து மதத்தின் மகத்துவம் குறைந்து அனுச்சாரமான செய்கைகள் மிகவும் மலிந்து வருவதற்குக் காரணம் நம் குருக்களென்றும் நாம் அவர்கள் சொல்வதை மூடநம்பிக்கையாக நம்பிப்பின்பற்றுவதாலேயும் இந்துமதம் ஈனதிசையடைவதற்கு பெரும் காரணமாக இருக்கிறதென்றும் அந்த மூடநம்பிக்கையில் தீண்டாமையும் கோவில் பிரவேசங்களில் சமத்துவமின்மையுமே யென்றும் இன்னும் உருக்கமாகப் பேசி முடித்தார்.

கடைசியாக அக்கிராசனரின் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரங்கூறப்பட்டு கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது கலைந்தது.

எஸ். கே. தங்கவேலுநாடார்.

## கோப்பிநாயக்கன்பட்டி

பிரபவ ஹு வைகாசி மீ 3 உ பால்யநாடார் சங்கம் வைகாசிமாத மீட்டிங் ஸ்ரீமான் ஏ. அழகிரிசாமி நாயக்கர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் வள்ளிப்பநாடார் வித்தியாசாலையின் சபா மண்டபத்தில்கூடியது. அச்சமயம் தருமம், அன்பு, கல்வி, விவசாயம் தேச முன்னேற்றம் அசைவம் மேலானது, சைவம் மேலானது என்ற அம்சங்களைக் கொண்டு முறையே ஸ்ரீமான்கள் கே. கொத்தாளமுத்துநாடார் செல்வநாடார் வி. யோசேபுநாடார் ஜே. ஏ. பொன்னையா நாடார், எஸ். பழனிச்சாமிநாடார் யன். கே. வி. மாரியப்பநாடார், தவசிநாயுடு முதலியவர்களால் பேசப்பட்டு ராஜவாழ்த்துக்கூறி கூட்டம் இனிது கலைந்தது.

பால்யநாடார் சங்க சேக்கரட்டேரி—
ஜே. ஏ. பொன்னையாநாடார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## வாழ்க்கைக்கு இன்றியமையாதது

அமெரிக்க நாட்டு ஹெல்த் கமிஷனர் டாக்டர் மத்தியாஸ் நிகால் எழுதியது:—

இவ்வுலகத்திலே அற்ப ஆயுளை விரும்புவோர் ஒருவருமில்லை. யாவரும் நெடுநாள் வாழவே விரும்புகின்றனர். சாஸ்திரிகளும் டாக்டர்களும் தீர்க்காயுளுக்கு அனுகூலமான சுகாதார முறைகளையும் மற்றும் உபாயங்களையும் பிரதினமும் கண்டுபிடித்து வருகின்றனர். தீர்க்காயுள் வேட்கை நாகரீக உலகம் முழுவதும் பரவி விட்டது.

ஆனால் தீர்க்காயுள் பெறுவதுமட்டும் நம் முழு நோக்கமாயிருத்தல் கூடாது. நூறாண்டு வாழ்வதற்கு ஏற்ற விதிகள் தினந்தோறும் பத்திரிகைகளில் பிரசுரமாகின்றன. அவ்விதிகளை ஜனங்களும் மிக ஆவலோடு படிக்கின்றனர்; சிலர் அவ்விதிப்படி நடக்கவும் முயல்கின்றனர்.

நூறு வயது வாழ்ந்தவர்களின் ஜீவிய முறைகளை இதுகாறும் கவனித்து ஆராய்ச்சி செய்ததில்லை. பேருக்குமட்டும் நூறாண்டு வாழ்வதில் பெருமையோ, சுகமோ, பிரயோஜனமோ இருப்பதாகவும் எனக்கு விளங்கவில்லை. பொதுவாகப் படுகிழவர் நிலைமை மிகப் பரிதாபகரமாய் இருப்பதாகவே நான் நினைக்கிறேன். உயிர் நூல்வல்லார்க்கும் புள்ளிவிவர ஆராய்ச்சிக்காரர்களுக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுக்கும் நூறாண்டு வாழ்க்கை பயனுள்ளதாக இருக்கலாம். ஆனால் படுகிழவர்கள் உற்றார் உறவினருக்குப் பாரமாயிருந்து வருவதை உலக அனுபவமுடையவர்கள் அறிவார்கள். சுகாதார விதிகளைப் பின்பற்றிக் கிழவர்கள் மிக்காரும் நெடுநாள் வாழவில்லை. கண்மூடித்தனமாய் ஒழுங்கற்ற வாழ்க்கை நடத்துவோரும் நூறாண்டு வாழ்வதுண்டு. ஆகவே, நூறாண்டு வாழ்வு மட்டும் நம் ஜீவித நோக்கமாயிருத்தல் தவறு. பயனுள்ள—பரோபகாரமான வாழ்வையே நாம் பெரிதும் விரும்ப வேண்டும்.

### எத்தனை வயதுவரை பயனுள்ள வாழ்வு வாழலாம்.

நம்மவரில் பெரும்பாலார் இவ்விஷயத்தைப்பற்றிச் சிந்திப்பதில்லை. பயனற்ற வாழ்வு வாழ யாராவது விரும்புவார்களா? நம்மால் உலகத்துக்கு ஒரு பயனுமில்லை என்று அறிந்த பிறகும் வாழவிரும்புவது அருவருக்கத்தக்கதல்லவா? உண்மையில் பயனற்ற வாழ்க்கை பிண வாழ்க்கையாகும்.

பயனற்ற வாழ்க்கைப் பருவமடைந்தவர்களுக்கு இவ்வுண்மை புலப்படுவதில்லை. கைகால் சோர்ந்து, கண் பஞ்சடைந்து இளைத்துப் போனவர்களும் மருந்துண்டும், நோன்பிருந்தும் பின்னும் வாழவே விரும்புகின்றனர். இம் முயற்சியினால் உடலுக்கும் உளத்துக்கும் ஏற்படும் கஷ்டங்களையும் அவர்கள் தாங்கிக்கொள்கிறார்கள். கடைசியில் மரணந்தான் அவர்களுக்கு ஆறுதலை அளிக்கிறது.

இத்தனை வருஷங்கள் தான் பயனுள்ள வாழ்வு வாழலாமென்று வரையறுத்துக் கூறமுடியாது. பொதுவாக 50, 60 வயதுவரைப் பயனுள்ள வாழ்க்கை நடத்தலாம். சிலர் நூறு வயதுவரை பரோபகாரமாக வாழ்தலும் உண்டு.

பயனுள்ள வாழ்க்கையை விருத்தி செய்யவே வைத்தியர்களும், சுகாதார அதிகாரிகளும் கவனம் செலுத்தவேண்டும். பயனற்ற நீண்ட ஆயுளை வளர்க்க எண்ணுவது வீண் முயற்சி.

பயிற்சியினால் பயனுள்ள வாழ்நாளைப் பெருக்கமுடியும். வாழ்க்கை முறைகளை ஒழுங்குபடுத்த ஜனங்களுக்குப் போதனை செய்யவேண்டும். சிறுவர்களுக்கு இளமையிலேயே மிதவாழ்க்கையில் விருப்பமூட்ட வேண்டும். அமிதமாக உழைப்பதும் அமிதமாக விளையாடுவதும், அமிதமாக உண்பதும் தீமை விளைக்கும். உலக போகங்களில் தன்னடக்கம் மிகத் தேவையானது.

தொத்துவியாதிகளைத் தடுக்கும் முறைகளையும் ஜனங்களுக்குப் போதனை செய்யவேண்டும். அநேக தொத்துவியாதிகள் இளம்வயதில் சிறுவர்கள்

## மனோரஞ்சிதம்.

இல்லாத ஒன்றை உண்டெனக் கபடசாக்ஷிகளின் மூலமாய் கற்பித்து ஜெயித்தும் விடுகிறார்கள். உண்மையில் நடந்தவைகளை இல்லையெனவும் மாற்றிவிடுகிறார்கள். கைமேலிவைகளுக்குப் பலாபலன்கள் கிட்டாவிடினும் பின்னால் கிடைப்பது நிச்சயம். தெய்வம் நின்றே கேட்கும்.

ஒன்றை எழுதிவிட்டு இரண்டாவது தடவை மறுபடியும் வாசித்துப் பார்ப்பதிலும், ஒன்றை கற்றும், கேட்டும் விட்டு மறுபடியுமதை யோசித்துப் பார்ப்பதிலும் விலை மதிப்பிலாத நமதாயுட்காலத்தில் எவ்வளவு செலவிடுகிறோமோ அதைக்காட்டிலும் பன் மடங்கு நன்மைகளதில் மலிந்து கிடக்கின்றன.

பணத்துக்காக கட்டிக்கொள்வது போன்றது அழகுக்காகப் பெண்ணைக் கொள்வது.

முட்டைக்குள் இருவித வஸ்துக்களிருப்பது போலவே உலகமாகிய முட்டையிலின்பமும் துன்பமுமுண்டு. ஒன்றே இருந்துவிட்டால் அதனருமை தெரியாது. வெயிலில்தான் நிழலினருமை தெரியும்.

இருவரையும் தூண்டிவிட்டு பகைமூட்டி வேடிக்கைபார்ப்பவர்கள் லாட்டரிச்சீட்டுகள் போல் மலிந்துவிட்டனர். ஆனாலிருவரையும் சமாதானம் செய்து வீண் விஷயங்களை ஒழிக்க கம்நாட்டு பத்திரிகைபோலும் அலவகட்கு சந்தாதார்கள் போலும் ஆட்கள் குறைவு.

விவேகம் தற்பெருமையின்றி கடவுளையடையும் ஞானவழியை கைகாட்டுகிறது. அறிவீனம்தானென்ற அகங்காரத்தை—கர்வத்தைக் கைகாட்டுகிறது.

கேளாத கடன்போல் சிந்திக்காத கல்வி கேள்வியும் பயன் கொடாது.

முற்கால நாகரீகமானது பழைய சிவப்புக்கல்போன்றது. தற்கால நவீன நாகரீகமானது புதுச் சிவப்புக்கல் போல் மின்மினிப்பகட்டுடையது.

நாகரீகமென்றால் ஆடம்பரமல்ல; நவீனமுமல்ல; இயந்திரம் முதலியவைகளை உபயோகிப்பதுமல்ல; ஆனால் சன்மார்க்கத்தில் சிறந்து திறபதே உண்மை நாகரீகமாகும்.

அ. கு. அண்ணாமலை.

உடலில் புகுந்த செடிநோய் அடங்கியிருந்து முதுமைப் பருவத்தில் துன்பம் விளைக்கத் தொடங்கும். இருதயம் நுரையீரல், இரத்தாசய சம்பந்தமான நோய்கள் இவ்வண்ணம் தோன்றியனவாகும்.

ஆயுளை நீட்டுவதற்கு அநேக உபாயங்கள் கூறப்படுகின்றன. ஆயுளைப் புஷ்டிப்படுத்துவதற்கு முயற்சி செய்வோரைக் காணோம். நீண்ட ஆயுளைவிடப் புஷ்டியான ஆயுளே பெரிதும் விரும்பத்தக்கது.

### ஷஷ்டிபூர்த்தி செய்த புருஷரும் பெண்களும்.

கல்வி வளர்ச்சியால் ஜனங்களுக்கு நாளுக்கு நாள் சுகாதார விதிகளில் பயிற்சியேற்பட்டு வருவது உண்மையே. அதன் பயனாக புருஷரும் பெண்களும் முன்னையவிட நீண்டநாள் வாழ்ந்துவருகிறார்கள். 60 வயதில் முதுமைப் பருவம் தோன்றுவதாய்ப் பொதுவாக நம்பப்படுகிறது. இளவயதில் சுகாதார முறைப்படி பராமரிக்கப்பட்டவர்கள் முதுமைப் பருவத்தும் பயனுள்ள வாழ்க்கை நடத்துவது திண்ணம். தேகசுகமுள்ள கிழவர்கள் உற்றார் உறவினருக்குப் பளுவாக இருக்க மாட்டார்கள்.

பிறருக்குப் பாரமான இளவயதும் வெறுக்கத்தக்கதெனின், பிறருக்குப் பாரமான முதுவயதை யார்தான் விரும்புவார்கள்? ஆகவே தீர்க்காயுளைவிட பயனுள்ள—பிறருக்குத் துன்பம் விளைக்காத—வாழ்க்கையே பெரிதும் விரும்பற்பாலது.

## நோட்டீஸ்.

கொழும்பில் ப. சி. அ. ம. மஹாராஜன் & கம்பெனி என்ற விலாசத்துடன் நாங்கள் கூட்டாக நடத்திவந்த வியாபாரத்தில் பங்காளியாயிருந்த மிஸ்டர் து. சிவராமகிருஷ்ணநாடார் அவர்கள் நாங்கள் புரக்டர் கொத்தாரிஸ் ஸ்ரீமான் ஜே. எச். ராசையா ஜோஸப் அவர்கள் மூலம் எழுதிரிஜிஸ்டர் செய்திருக்கிற எக்ரிமெண்ட் ஷரத் நிபந்தனைகளுக்குட்பட்டு 31—5—27 முதல் ஷை கம்பெனியைவிட்டு நீங்கிவிட்டபடியால் ஷை ப. சி. அ. ம. கம்பெனிசம்மந்தமான கொடுக்கல், வாங்கல் வியாபாரவிஷயங்களில் ஷை து. சிவராமகிருஷ்ண நாடாருக்கு யாதொரு விதமான பாத்யதையும் சம்மந்தமும் இல்லையென்பதையும் ஷை யாருக்கு நாங்கள் கொடுத்திருந்த (பவர்-ஆவ்-அட்டார்னி) தத்துவத்தை ரத்துச்செய்து விட்டோமென்பதையும் இந்தப் பகிரங்க நோட்டீஸ் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ப.சி.அ.ம.மஹாராஜன் & கம்பெனி,
நிர் 35, குமார வீதி,
கொழும்பு.

## இரவில் மணிபார்க்கும் ரேடியம்ரிஸ்லெட்கெடியாரம்



இந்தக் கெடியாரத்தில் இரவில் எவ்வளவு இருட்டாயிருந்தாலும் விளக்கு வெளிச்சமில்லாமல் மணி நன்றாய்த் தெரியும். கையில்கட்டும் தோல்பட்டையுடன் விலை ரூ 6-8-0.

விலாசம்:— ககக அண்டு கம்பெனி,
பார்க்டவுன்போஸ்ட், மதராஸ்.

## கணித சோதிடம்.

பரகித கணிதப்படி கணனஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமானபதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம்ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப் பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னதென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது சரிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகஞ் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

## தமிழ் புக் கீப்பிங்

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை புன்கு போதிப்பது, ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகக்களு மடங்கியிருக்கின்றன. அனேக வியாபார இரகசியங்களையு முடையது வியாபாரிகள். மாணுக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்

தே. ஆறுமுகஞ் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

## பச்சையிலைத் தைலம் கம்பெனி,

பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

# குஷ்டம் தீர்ந்த படம்.

குஷ்ட வியாதியுள்ளவரை முன்னதாகப் புகைப்படம் எடுத்து எங்கள் குஷ்டாரண நிவாரண எண்ணெய் கொடுத்து அந்த வியாதியை சொஸ்தப்படுத்தி, மறுபடியும் புகைப்படம் எடுத்து வைத்திருக்கிறோம். குஷ்டரணம், குழிப்புண், படை, திமிர, மொதமொதப்பு யாவும் தீர்ந்துவிட்டதை அப்படத்தில் நன்றாயறியலாம். உங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் அப்படத்தை அனுப்புகிறோம்.

குஷ்டாரண நிவாரண எண்ணெய 20-நாள் புட்டி 1-க்கு ரூபா 20.
" " 40-நாள் " ரூபா 40.



சர்வரோக நிவாரணி

### பச்சையிலைத் தைலம்.

வெள்ளை, வெட்டை, கிரந்தி, கொருக்கு, லிங்கப்புற்று, யோனிப்புற்று, கன்னப்புற்று, கபாலப்புற்று, அரையாப்பு, தடைவாழை முதலிய கொடிய நோய்களை (ஆப்ரேஷன்) அறுத்து கஷ்டப்படாமல் ஆச்சர்யப்படும்படி ஆற்றிவரும் கைகண்ட மருந்து பச்சையிலைத் தைலம்.

மேக சம்பந்தத்தாலுண்டாகும் எல்லா வியாதிகளையும், ரணங்களையும், ராஜப்பிளவையையும், வாதசம்பந்தத்தாலுண்டாகும் கைகால் வீக்கம், குத்தல், குடைச்சல், அஷ்டவித குன்மங்கள், குதகபந்தம நீங்காத வயிற்றுவலி முதலிய சகல வியாதிகளையும் சூரியனைக்கண்ட பனிபோல் நீக்குவது பச்சையிலைத் தைலம்

சாப்பிடுவதற்கு கஷ்டமின்றி காப்பியில் துளிக் கணக்காக விட்டு சாப்பிடக்கூடியது பச்சையிலைத் தைலம்

பெண்கள் நோயால் அவஸ்தைப்பட்டு (ஆப்ரேஷன்) அறுத்தறுத்து மறுபடியும் கிளம்பிக் கஷ்டப்பட வேண்டியதில்லை. உடம்பிலுள்ள ரத்தத்தைச் சிந்தாமலே அந்நோயிருக்குமிடந்தெரியாமல் பறக்கடிக்கக்கூடியது எங்கள் பச்சையிலைத் தைலம் எனப் பந்தயங்கட்டுவோம். உங்களுக்கு மருந்து சாப்பிடாமல் அந்த மேக வியாதி அறவே நீங்காது. ஆப்ரேஷன், இஞ்சக்ஷன முதலிய சிகிச்சைகளால் உபசாந்தியானாலும் மீண்டும் கஷ்டப்படுவீர்கள். ஆகையால், நமது தமிழ்நாட்டின் பொக்கிஷங்களில் ஒன்றாகிய மூலிகைகளால் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்ட பச்சையிலைத் தைலத்தைச் சாப்பிட்டு வியாதியை அறவேயொழித்து சுகத்தையடையுங்கள்.

7-நாள் சாப்பிடக்கூடிய தைலம் புட்டி 1-க்கு ரூபா 5-0-0. வி. பி. தபால் சார்ஜ் 0-6-0. பினாங்கு, சிங்கப்பூர், மலாய் நாடுகள், செட்டால் தென்னாப்ரிக்கா முதலிய தேசங்களிலுள்ளவர்கள் ரூபா 6-8-0 முன்பணமாக மணியார்டர் அல்லது போஸ்டல்ஆர்டர் அனுப்பிப்பெற்றுக்கொள்ளவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection